www.padippakam.com

# சிரித்திரன்




தை, மாசி - 1992

படிப்பகம்

www.padippakam.com

# சோபிகா

## ஜுவல்ஸ்



நகைத்தொழிலில் அனுபவமும் திறமையும் மிக்க
தொழில் கலைஞர்களின் கைவண்ணத்தில்
உங்கள் இதயம் கவர் தங்கநகைகள்

உங்கள் நகைத் தேவைகள் அனைத்திற்கும்,
கல் அட்டியல், பதக்கம் முதற்கொண்டு
அனைத்துரக நகைகளையும் ஒரே இடத்தில்
நம்பிக்கையுடன் குறித்த தவணையில்
ஓடர் செய்து பெற்றுக் கொள்ள

**SOPIGA**

**JEWELLES**

**3 Rue Eugene Sue**
**75018 Paris**
**Mo: Marcadet - Poissonniers / Jules-Joffrin**

(சிந்துஜா ரெஸ்ரோரண்ட் முன்னிலையில்)

TEL: 42 64 88 54

படிப்பகம்

www.padippakam.com

சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம் சிரிப்பே சீவியம்

நகை 31 ★ தை - மாசி 1992 ★ சுவை 1

# நிலைக் கண்ணாடி

## கலைமலர் முகிழ்கிறது!

அன்று புளோரன்ஸ் நகரில் கலை மொட்டு முகிழ்த்தது. மேதாவிலாசமும் கலை உலகை அதிசயிக்க வைத்தது. அதை மகோன்த மறுமலர்ச்சி என வையகம் வாழ்த்தி நின்றது.

மைக்கேல் அஞ்சலோ, லியனோ டி டாவின்சி, பிரம்மன்றி என கலை மாமனிதர்கள் கலை வானில் தோன்றினார்கள். மைக்கல் அஞ்சலோ தமது உளியாகிய மந்திரக் கோலால் பீயட்டா, டேவிட் மோஸஸ் என்று பல சிற்பங்களைப் படைத்தார். அந்த அற்புதங்களின் திவ்விய தரிசனத்தில் இன்றும் உலகம் புளகாங்கிதம் அடைந்து நிற்கின்றது. லியனோ டி டாவின்சி பல கலைகளில் மேதையாகத் துலங்கினார். அவரது பொறியியல் தொழில் நுட்பத்தை அரசர்களும், தளபதிகளும், யுத்தகாலத்தில் நாடினார்கள். பிரம்மன்றி கட்டியெழுப்பிய சென்ற். பீற்றேஸ் தேவாலயம் வையகம் வணங்கி உயர்ந்து நிற்கிறது. மறுமலர்ச்சிக் காலத்தை பல கலைமாமணிகள் மலர வைத்தார்கள்.

எமது தமிழீழத் திருநாட்டில் கலைஞர்கள் தந்த கோபுரத்தில் இருந்து, கற்பனைவானில் சஞ்சாரம் செய்யவில்லை. புழுதிப் புத்திரர்களாக இருந்து, யுத்த நிகழ்வுகளிற்கு நிதர்சனக் கலைவடிவம் கொடுக்கிறார்கள். ஓவியர்கள் தூரிகையைத் தூர வைத்து விட்டு, நாட்டு நடப்புகளுடன் பாராமுகமாக இருக்கவில்லை. போராளிகளின் சாதனையைப் பார், பாராட்டும் முறையில் சித்திரமாக வரைந்து கொண்டிருக்கிறார்கள். ஈழத்து ஓவியத்தில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றது.

குண்டுகள், எறிகணைகள், பீரங்கிகள், 'கோஷ்டி கானம்' இசைக்கும் போது, எமது தமிழீழத் தேசியப் பாடல்கள் அமிர்தகானமாக இருக்கின்றன. ஒரு காலம் திரை இசையிலும், 'பொப்' இசையிலும் மயங்கி இருந்த நாம் இன்று தாயகப் பாடல்களையே இரசிக்கின்றோம். பாலர் முதல் பாட்டா வரை தாயகப் பாடல்களையே ரீங்காரம் செய்கின்றார்கள்.

காலங்காலமாக நாம் இந்தியப் பாடகர்களையே வரவழைத்து பாடவைத்து ரசித்து வந்தோம். இன்று எமது சொந்த மண்ணில் மலர்ந்த இசை விற்பன்னர்களைக் கொண்டு காதாரக் கேட்டு பூரிப்படைகின்றோம். இன்று நல்லை ஆதினத்திலும், கம்பன் கோட்டத்திலும், கைலாசபதி கலை அரங்கிலும் இசைக்கச்சேரிகள் இடம் பெறுவதைக் கேட்கக் கூடியதாக இருக்கின்றது.

நாடகத் துறையிலும் பிரமிக்கத்தக்களவு நாம் வளர்ந்துவிட்டோம். இதற்கு "உயிர்த்த மனிதர் கூத்து" எடுத்துக்காட்டு, நாம் நாடகக் கலையில் சளைத்தவர்களல்ல. அண்ணாவிமார்கள் கிராமத்திற்குக் கிராமம் இருந்து நாடகங்களை வளர்த்த காலமது. திரைக்கலை வந்த பின்பு எமது நாடகம் கலைந்துவிட்டதென்றே கூறலாம், மீண்டும் எம் நாடகங்கள் புதிய யுத்தியில், நவீன பாணியுடன் மேடையேறுவதைக் கண்டும், கேட்டும் இறும்பூதெய்துகிறோம்.

நீண்ட கால அந்நியராட்சியில் எமது கலாலயத்தில் வலை பின்னிவிட்டது. கலைஞர்கள் அந்நியரின் சாபத்தில் உக்கிக் கிடந்தார்கள். இன்று முகமலர்ச்சியுடன் விழித்துக்கொண்டார்கள். இக்காலம் மறுமலர்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# கேள்வி மகுடி பதில்கள்



**செல்வி ராணி மரியாம்பிள்ளை, சில்லாலை.**
● இரட்சகன் என்பவன் யார்?
■ தான் அனுபவித்த இடர்களை சுடராக்கி வழிகாட்டுபவனே இரட்சகன்.

**செல்வி. குமுதினி, மாதகல்**
● கல்வி எப்படிப்பட்டதாகஇருக்க வேண்டும்?
■ நாட்டிற்கு உழைக்கும் பக்குவத்தையும் பண்பையும் ஊட்டவேண்டும்; பரீட்சைப்படி ஏறுவதற்கானது, படிப்பல்ல.

**செல்வன். புவிராஜசிங்கம் - பளை**
● அரசியல்வாதியின் சிந்தனை எல்லாம் எதனில்?
■ அடுத்த தேர்தலில்; அடுத்த தலைமுறையில் அல்ல.

**செல்வன். குமரன் - மானிப்பாய்**
● ஜனநாயகம் பற்றி சிறிது செப்பும் மகுடியாரே?
■ வாக்குச்சீட்டிற்கும் துப்பாக்கி வேட்டிற்கும் இடையில் ஆடும் ஊஞ்சல்.

**செல்வன். சுகுமார் தம்பிராசா - சாவகச்சேரி**
● எமது மாணவர் பற்றி உமது கருத்து?
■ பொம்பர் அடியிலும், ஷெல் அடியிலும், நுளம்புக் கடியின் மத்தியிலும், நிறையப்புள்ளிகள் எடுக்கும் பெரும் புள்ளிகள்.

**செல்வன். மணிசேகரன் - ஆவரங்கால்**
● கொடுமை எது? கொடுமையிலுங் கொடுமை எது?
■ பிறந்த மண்ணிலேயே அகதியாக்கப்படுவது கொடுமை, அகதி முகாம்கள் மீது குண்டு போடுவது கொடுமையிலுங் கொடுமை.

**இ. நந்தகுமார் - கிளிநொச்சி**
● பைத்தியக்காரர்களுக்கும் பத்திரிகை நிருபர்களுக்குமுள்ள ஒற்றுமை என்ன?
■ இருவரது பைகளுக்குள்ளும் (சட்டைப் பைகள் உட்பட) காகிதங்கள் நிறைந்திருக்கும்.

**செல்வி. ரதினி - நல்லூர்**
● தமிழன் நிலை பற்றி விளக்கும்!
■ அகிலமெல்லாம்அகதி; அதுதான் ஜனநாயக ஆட்சியின் மாட்சி.

**செல்வன். நாதமணி - வரணி**
● மாதவி கற்பில் சிறந்தவளா?
■ கற்பிலும் சிறந்தவள், அவள் கலையும் கற்பில் சிறந்தது.

**செல்வன். பிரகாசம் - ஊறாவத்தை**
● வீடுவரை உறவு, வீதிவரை மனைவி, கடைசி வரை யாரோ?
■ குத்திய பச்சை.

**செல்வன் பரணிதரன் - அச்சுவேலி**
● மது எமது பொருளாதாரத்தை பாதிக்குமா?
■ குழந்தையில் கேட்ட ஒன்று இன்றும் ஞாபகமாக இருக்கிறது:
"கள்ளு, சாராயம், விஸ்கி, கஞ்சா, அபின், பிரண்டி கொள்ளை கொண்டு போகுதையோ கோடானது கோடி திரவியத்தை. . . . . "

**செல்வி. ஞானமலர் - தும்பளை.**
● நீர் எவற்றை விரும்புவதில்லை?
■ ஆள்வதையும் விருப்வில்லை; ஆளப்படுவதையும் விரும்பவில்லை.

**அடுத்த இதழில் இருந்து கேட்கப்படும் மிகத்தரமான கேள்விக்கு மில்க்வைற் அதிபர் திரு. கனகராசா அவர்கள் 50/-ரூபா பரிசளிப்பார் என்பதை வாசகர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**



படிப்பகம்

www.padippakam.com

**செல்வி. பொன்மணி - மானிப்பாய்**

● இராணுவம் ஏன் யாழ்ப்பாணம் வந்தது?

■ துப்பாக்கி முனையில் அரச மரம் நடுவதற்கு.

**செல்வி. கௌரிமனோகரி - திக்கம்**

● நல்லநாள் பெருநாளில் பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் பெற்றோர் பிள்ளைகளை நினைத்து கண்ணீர் வடிப்பதில்லையா?

■ பொங்கலும் பொங்கும்; கண்ணீரும் பொங்கும்.

**ர்விகணேசன் - மானிப்பாய்**

● ஒரு செய்தி கூறும் மகுடியாரே!

■ வீதியில் தேரோடுது, ஆகாயவீதியில் சகடை ஒடுது.

**செல்வன். சாம்பசிவம் வேதவனம் - மூளாய்**

● யுத்தகாலச் சிந்தனை ஒன்று கூறும்!

■ வேட்டு கொல்லாமல் விடலாம்; வதந்தி கொல்லும்.

**நாகமணி மகேந்திரலிங்கம் - சங்கானை**

● தாய்மை, நேர்மை, வாய்மை - ஒப்பிடுக!

■ தாய்மையில் எல்லாம் அடங்கி விடுகிறதே?

**செல்வி. கே. கல்பனா - மானிப்பாய்**

● புயலோடு பூகம்பம் ஏற்பட்டால்?

■ அது சீற்றம் கொண்ட இயற்கை அன்னையின் சங்கார நடனம்.

**செல்வன். குமார் - ஆவரங்கால்**

● ஞானப்பழங்கள் மேடையில் பேசும்போது தத்துவ முத்துக்களாய் உதிர்கின்றனவே!

■ மயில் இறகு போடுவது சகஜம் தானே.

**செல்வி. உஷா - நீர்வேலி**

● புரிந்துணர்வு இல்லாவிட்டால். . ?

■ மாதானம் ரத்து; சம்சாரமும் ரத்து.

**செல்வி. வனிதா - முத்திரைச்சந்தை**

● உலகில் ஞானி எதைக் காண்கிறான்?

■ தாய்மையைக் காண்கிறான்.

**செல்வி. கௌரி - மானிப்பாய்**

● வாழ்க்கையில் பிரகாசிக்க என்ன செய்ய வேண்டும்?

■ தோல்விகளை மனவீணையில் மீட்டுபவன் தேய்பிறையாகிறான் -வெற்றிகளை மீட்டுபவன் வளர்பிறையாகிறான்.

● மனைவி எப்போது ஆச்சரியக் குறியாக மாறுகிறாள்? எப்போது கேள்விக்குறியாக மாறுகிறாள்?

■ கணவனைப் பார்த்து சமூகம் ஆச்சரியக் குறியாய் நின்றால் மனைவி கேள்விக்குறியாக மாறுவாள்.

**செல்வன். சிவன் - அராலி**

● மனிதகுல ஒற்றுமை வேற்றுமையைக் கூறும்!

■ மனிதன் சுவாசிப்பது ஒரே காற்று; யோசிப்பதோ வேறு.

**செல்வன். குமாரவேல் - வரணி**

● அட்சய பாத்திரத்திற்கும் பிட்சா பாத்திரத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

■ அட்சய பாத்திரம் சுரக்கும், பிட்சா பாத்திரம் இரக்கும்.

**செல்வி. கவிமணி - நல்லூர்**

● தமிழீழத் தேசியப் பாடல்களில் உமக்கு எந்தப் பாடல் பிடிக்கும்?

■ பூச்சரத்தில் எந்தப் பூ கூடுதலாகப் பிடிக்கும் என்று கேட்டாற் போல் இருக்கிறது.

**செல்வன். செந்திவேல் - துன்னாலை**

● எவன் அனுதாபத்துக்குரியவன்?

■ பிறர் அனுதாபத்தை எதிர்பார்ப்பவன்.

**செல்வி. கலா - சண்டிலிப்பாய்**

● தமிழ் இனம் இன்று தீக்குளிக்கின்றதே. . . !

■ பொன் தானே புடம் போடப்படுகின்றது.

**செல்வி. மங்களம் சின்னையா - வதிரி**

● உமக்குத் தெய்வ நம்பிக்கை உண்டா?

■ தன்னம்பிக்கை சமன் தெய்வநம்பிக்கை எனக்குத் தெய்வநம்பிக்கை உண்டு.

**செல்வன். றமேஷ் - ஆவரங்கால்**

● கோழைகளால் இன்பம் அனுபவிக்கமுடியுமா?

■ "வீரர்களால் மட்டுமே உலகில் இன்பம் அனுபவிக்க முடியும்" என விவேகானந்தர் கூறுகின்றார்.

**செல்வி. வாசுகி சிதம்பரம் -கொக்குவில்**

● இன்று உலகம் நெருக்கடியான நிலையில் இருப்பதன் காரணம் என்ன?

■ நாடுகள் இன்று தமது சுதந்திரத்தையும் எதிர்காலத்தையும், தமது தர்மத்தையும் பாதுகாக்க வேண்டிய நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

(சிரி கதை) 1

# "ஆயுதம் வேண்டும் எனக்கு!"

இந்திய இராணுவம் நிலைகொண்டிருந்த 1989ஆம் ஆண்டுக்காலம் -இயக்கச்சிப் பகுதியில் உள்ள கோவில் வயல் என்னும் கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் செல்வராஜா, உபாலி என்ற இரு போராளிகள் வந்து போகின்றார்கள் என்று ஒரு தகவல். இதற்காகப் பலமுறை அந்த வீட்டைச் சோதனையிட்டனர் இந்திய இராணுவத்தினர். பலனேதும் கிடைக்கவில்லை. ஒவ்வொரு தடவையும் வீட்டுக்காரரைத் தாக்கிவிட்டுச் செல்வதை மரபாக்கியிருந்தனர். ஒரு சமயம் இருநாட்களுக்கு மேலாக அந்த வீட்டில் மறைந்திருந்தனர். அப்பகுதியில் இருந்து எவரையும் வெளியேற விடாமல் காத்திருந்தனர். இவர்கள் செய்யும் "தவம்" பற்றி போராளிகளுக்குத் தெரிந்ததால் அப்பகுதிகளுக்கு அவர்கள் செல்லவில்லை. களைத்துப் போய் முகாம் திரும்பியதும், "மீண்டும் அந்தப் பகுதியில் போராளிகள் நடமாடுகிறார்கள்" என்று தகவல் கிடைத்தது அவர்களுக்கு. எனவே அந்தக் கிராமத்தையும் அருகிலுள்ள கிராமங்களையும் முற்றுகையிட்டனர். இம்முற்றுகைக்கு ஓர் பிரிகேடியர் தலைமை தாங்கினார். அந்த முற்றுகையின் போது கிராமத்தவர்கள் அனைவரையும் ஒரு இடத்தில் சேரும்படி கட்டளையிடப்பட்டது. முற்றுகையிலிருந்து தப்புவது கடினம் எனத் தெரிந்து கொண்ட குறிப்பிட்ட இரு போராளிகளும் இராணுவத்திற்கு வழிகாட்டியாக வந்த இளைஞனது வீட்டில் போய்த் தங்கியிருந்தனர். அதைவிடப் பாதுகாப்பான இடம் வேறு எதுவும் கிடைக்காதல்லவா?

முற்றுகையின் போது மக்கள் தரம் பிரிக்கப்பட்டார்கள். ஆதரவு செய்பவர்கள், சாப்பாடு கொடுப்பவர்கள், புலியோடு பேசுபவர்கள், புலியைப் பார்ப்பவர்கள் என பல வகையாகப் பிரிக்கப்பட்டதும், "வழமையான உபசரிப்புகள்" நடைபெற்றன. இறுதியில் குறிப்பிட்ட வீட்டிலிருந்து எடுக்கப்பட்ட புகைப்பட அல்பம் ஒன்றை பிரிகேடியரிடம் காட்டி விளக்கியவாறே கருப்பசாமி என்ற மேஜர் உரை நிகழ்த்தினார். இந்திய இராணுவத்திற்கே உரித்தான வழமையான பிரசுரிக்க முடியாத வார்த்தைகளுடன் மேலும் சில வார்த்தைகள் வந்தன.

"ரெண்டு பேர் வாறாங்க. இவங்களை இந்த ஊருல இருக்கிற இத்தனை ஆம்புளகளாலயும் புடிக்க முடியலயா? நீங்கல்லாம் பொட்டப் பசங்க. உங்களுக்கெல்லாம் மீச எதுக்கடா? எல்லோரும் போய்ச் சேலை கட்டுங்கடா" என்று திட்டினார். தொடர்ந்து "இந்த ஊருக்குள்ள வர்ற செல்வராசா, உப்பாலி ரெண்டு பேரையும் புடிக்க என்னென்ன வேணும் கேளுங்க. துப்பாக்கி வேணுமா? அது வேணுமுன்னாலும் தர்றம். உங்கள்ள யாருக்காவது தைரியமிருந்தா யாராவது மீச முளைச்ச ஆம்பளையா இருந்தா துப்பாக்கி வேணுமெங்கிற ஆம்பளைங்க எழும்புங்க" என்று ஒரு "ஊக்குவிப்பு அறிவிப்பு" கொடுத்தார்.

மேஜர் கருப்பசாமியின் வார்த்தையைத் தொடர்ந்து மௌனம் ஒருவரும் எழும்பவில்லை. சிலர் இந்திய இராணுவத்தைத்தான் கருப்பசாமி பேசுகிறார் என்று பேசாமல் இருந்துவிட்டனர். அத்துடன் எல்லோரும் தலையைத் திருப்பி யாராவது எழும்புகின்றனரா என்று பார்த்துக் கொண்டிருந்தனர். இறுதியாக ஒருவர் எழும்பினார். சண்டிக்கட்டைக் கூட அவர் அவிழ்த்துவிடவில்லை. அவர் வேறு யாருமல்ல. அடிக்கடி முற்றுகைக்குள்ளாகும் அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர்தான். கிராமத்தவர் அனைவருக்குமே வியப்பு, பிரிகேடியர் முகத்தில் புன்சிரிப்பு.

கருப்பசாமிக்கோ மகிழ்ச்சி தாளவில்லை. இன்னும் உஷாராகப் பேசத் தொடங்கினார். "பாருங்க இந்த வயசுல இந்த ஐயா துணிஞ்சு ஆயுதம் கேக்கிறாரு, நீங்களெல்லாம் பொட்ட மாதிரி இருக்கிறீங்க இப்படி ஒரு வீரன் உங்க மத்தியில இருக்கிறதுக்காக நீங்க பெருமைப்படணும்" என்றவாறே அவரை நோக்கி "ஐயா உங்களுக்கு எத்தனை வயசு?" என்றார் அவர். "அம்பத்திரண்டு" என்றார். "சரி ஐயா, நீங்க ஏன் ஆயுதம் கேக்கிறீங்க? அத இவங்களுக்குச் சொல்லுங்க" என்றார் கருப்பசாமி. ஐயா ஒரு கணமும் தாமதிக்கவில்லை. பதில் சொன்னார். "உன்னோடை இருக்கிறத விட நீ தாற துவக்கால என்னை நானே சுட்டுச் செத்துப் போகலாம். அதுக்குத்தான் துவக்குக் கேக்கிறன்."

| | |
|---|---|
| சிறு நுளம்பு: | "என்னம்மா, இந்த மனிதரில ரத்தம் ஒன்றையும் காணோமே? |
| தாய் நுளம்பு: | "இப்ப இவையள் பச்சையரிசியைத் தின்னுகினம்; கவனமாயிரு!" |

- நந்தன் -



படிப்பகம்

www.padippakam.com



## மகன் தந்தைக்காற்றும் உதவி

சங்கத்தார்வயல் - கோவில்வயல் பகுதியில் நிகழ்ந்த இராணுவ முற்றுகையின் போது நடைபெற்ற இன்னொரு சம்பவம் இது. விசாரிக்கப்பட வேண்டியவர்கள் எல்லோரையும் வரிசையாக வரச்சொல்லியிருந்தனர் இந்திய இராணுவத்தினர். அவ்வாறே வந்து கொண்டிருந்தவர்களில் அவர்களுக்கு வழிகாட்டியாக வந்த இளைஞனின் தகப்பனும் ஒருவர். அவரது முறை வந்ததும் அவரிடம் ஏதோ கேட்டான் ஒரு சீக்கியச் சிப்பாய். அவரும் பதில் சொன்னார். அவர் சொன்னதற்கு என்ன அர்த்தத்தை விளங்கிக் கொண்டான் என்பது அந்தச் சிப்பாய்க்கே வெளிச்சம். அது நிச்சயமாக நல்ல விஷயம் இல்லை என்பது மட்டும் மக்களுக்குத் தெரிந்தது. அந்தளவுக்கு அவருக்கு அடி விழுந்து கொண்டிருந்தது.

தனது தந்தையைத் தாக்கத் தொடங்கியதும், வழிகாட்டி இளைஞன் கத்தினான்: "அவர் எல். ரீ. ரீ. இல்லை; அவர் எல். ரீ. ரீ இல்லை!"

எல். ரீ. ரீ. என்ற சொல்லைக் கேட்டதும்தான் தாக்குதலின் வேகம் இன்னும் அதிகரித்தது. ஒரு கை முறியும் வரை தாக்கினான் சீக்கியச் சிப்பாய். மகனால் வந்த நிலை - தந்தை யாரிடம் சொல்வது?

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு ஆசிரியர் முணுமுணுத்தார்: "மகன் தந்தைக்காற்றும் உதவி - கொல் எனும் சொல். "

●●●

## சி(இ)வன் விரும்பிய பிட்டு

சைவர்களின் முழுமுதற் கடவுளாகிய சிவன் பிட்டிற்காக (புட்டு) மண் சுமந்ததாக ஒரு புராணீகம். அது நடந்தது மதுரையில் என்பது தெரியும்; அந்த மதுரை இருப்பது தமிழ் நாட்டில் என்பதுவும் தெரியும். ஆனால் அந்தத் தமிழ் நாட்டவருக்கே இன்று பிட்டு என்றால் என்னவென்றே தெரியாது! - இது தெரியுமா?

காலை, மாலை உணவுகளில் பிட்டிற்கே முக்கிய இடம் கொடுப்பது இன்றும் நம் ஈழநாட்டில்தான் வழக்கில் இருக்கிறது. தமிழகத்தின் அநேக பகுதிகளிலோ அந்த இடம் இட்லி, தோசை போன்றவற்றிற்குத்தான்.

அதனால்தான் இரும்பொறை என்ற கவிஞர் எமது மண்ணில் வாழ்ந்த காலத்தில் அவருக்கு பிட்டு சாப்பிடும் எமது பழக்கவழக்கம் வித்தியாசமானதாக இருந்திருக்கின்றது. அவரது கவிதைகளில் அடிக்கடி பிட்டு இடம் பெற்றதும் இதனால்தான்.

## நீரிழிவு நோய் (நீர் அழிவீர்)

அருட்திரு. வீ.ஜே. சீவரத்தினம் B. TH.
புதுவாழ்வு நிலையம் - ஆனைக்கோட்டை -

தீராத வியாதியின் தொல்லை. இதை
தீர்க்கவே நாட்டில் மருத்துவரில்லை.
கோராத மருத்துவமில்லை. மருந்து
கொடுக்காத வைத்தியத் துறையினரில்லை
சக்தியை உடம்பிற் குறைக்கும். இது
சத்தான உணவையே தள்ளவும் செய்யும்.
மக்களை விரைவில் மாய்க்கும் - மன
மாற்றம் சிலருக்கு ஏற்படவும் செய்யும்.

சக்கரை கோப்பியில் கலவார். எந்தச்
சமயமும் இனிப்பு ஆகாதென்பார்.
அக்கறை கொள்ளவே செய்வார். அந்த
ஆர்வமும் எனக்கு தொல்லையாய் முடியும்.
அரிசி உணவைக் குறைப்பார் அந்த
ஆகாரம் உடலுக்காகா தென்பார்.
பிரியப் பொருட்களைத் தவிர்பார் -சிறு
பிள்ளையைப் போலவே நடத்தியும் வருவார்.

தின்னப் பழம் கொண்டு வருவார். அதை
தின்கின்ற போதிலே தட்டிப் பறிப்பார்.
என்னகாரணமெனக் கேட்டால், பழம்
எனக்குக் கொடுக்கக் கூடாது என்பார்.
உருழைக்கிழங்கையும் காட்டார். எச்சில்
ஊறும் வகையிலே மற்றவர் உண்பார்.
கருணை இல்லாமல் நடப்பார். நல்ல
கருணைக் கறியையும் உண்டிட வொட்டார்.



"அந்நிய நாட்டுக்குப் போன பிள்ளை கடிதம்தான் போடவில்லை, கடைசி கல்யாணக் கார்டையாவது அனுப்பியிருக்கலாம். . . . "

- கரவை ஞானம்



படிப்பகம்

www.padippakam.com

# புத்துயிர் பெறும் மொழியுணர்வு!

தமிழ் மக்களிடையே மொழியுணர்வு புத்துயிர் பெற்றுவருவதை அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. இது மிகவும் வரவேற்கத் தக்க விடயம். இன அழிப்பை எதிர்த்துப் போராடி வரும் ஒரு மக்கள் கூட்டத்திற்கு இது மிக மிக அவசியம்.

பல பெற்றோர் தமது பிள்ளைச் செல்வங்களுக்கு 'தமிழ்ச்செல்வி, தமிழினி, தமிழ்மொழி, தமிழ்குமரன், தமிழ்வேள், தமிழரசுவரன்....' எனப் பெயரிடுகின்றனர். இதன் மூலம் எமது மொழியில் தமக்குள்ள பற்றைப் புலப்படுத்துகின்றனர். அதே போல் தம் இல்லங்களுக்கும் "தமிழ்வளர்சோலை", "தமிழாலயம்", "செந்தமிழ் இல்லம்", "தமிழகம்" என்று பெயர் வைக்கின்றனர்.
இவ்விடயத்தை இங்கு குறிப்பிடுவதற்கு முன்னர் கடந்த காலத்தில் இம் மண்ணில் எந்த நிலைமை இருந்தது என்பதை ஒருமுறை திரும்ப நினைவிற் கொள்வது அவசியம்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து தமிழரின் ஆயுதப் போராட்டம், எழுச்சியடைந்த காலம் வரை அரசியலில் 'கறுப்புக் கோட்' காரர்களின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது. ஒருவர் எத்தனை கொலைகாரர்களை தனது வாதத்திறமையால் சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப வைக்கின்றாரோ அந்தளவுக்கு அவர் இந்த மக்கள் கூட்டத்திற்கு தலைமை தாங்கும் தகுதி படைத்தவர். அத்துடன் இன்னொரு தகுதியையும் மக்கள் எதிர்பார்த்தனர். அது மிகவும் வேடிக்கையான விஷயம். 'தமிழர்' தலைவர்களிற்கு தமிழ் பேசத் தெரிந்திருக்கக் கூடாது என்பதே அது.

பொதுக் கூட்டங்களில் பேசும் பேச்சாளர்கள், தமிழ் தெரியாமல் திண்டாடினால் அதை ரசிப்பார்கள். அவர்கள் பேசும்போது குறிப்பிட்ட விசயத்திற்குத் தமிழ் தெரியாமல், மேடையில் அமர்ந்திருக்கும் சகாக்களிடம் அதனை ஆங்கிலத்தில் விளக்கி தமிழைத் தெரிந்து பின்னர் அச் சொல்லைச் சொன்னார்களென்றால் போதும், ரசிகர்கள் கூட்டம் உற்சாகமடைந்துவிடும். கைதட்டல், விசிலடிப்பு - ஒரே அமர்க்களமாகிவிடும். அக் கூட்டம் - அந்தக் கைதட்டல்களும், விசிலடிப்புகளும் "மிச்ச சொச்ச தெரிந்த தமிழையும் மற" என ஊக்குவிக்கும்.

ஒரு சமயம் வடமராட்சியில் ஒரு கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒரு அரசியல் பிரமுகரின் ரசிகர் மேடைக்குக் கிட்ட நின்றிருந்தார். தனது அபிமானத் தலைவர் ஆங்கிலம் பேசும் அழகை ரசிப்பதற்காகத்தான் காத்திருந்தார் அவர். பேச்சாளரோ தமிழிலே பேசிக் கொண்டிருந்தார். குறிப்பிட்ட ரசிகருக்கோ ஏமாற்றமாக இருந்தது. தனது தலைவருக்கு நன்றாகத் தமிழ் தெரியும் என்று பார்வையாளருக்குத் தெரிந்தால் அவரது மதிப்பு என்னாவது? இந்த நிலைமையை நீடிக்கவிடலாமா? கூடவே கூடாது.

திடீரென்று குறுக்கிட்டார் அவர். தனது தலைவரைப் பார்த்து "தம்பி... உனக்குத் தமிழ் வராது, நீ இங்கிலீசில பேசு" நேயர் விருப்பமாக தனது உள்ளக்கிடக்கையை வெளியிட்டார்.

உடனே அவர் "த சோல்பரி கொன்ஸ்ரிரியூஷன்..." என்று ஆங்கிலத்தில் தொடங்கிவிட்டார். அவ்வளவுதான் ரசிகருக்கு உற்சாகம் பீறிட்டுக் கொண்டு வந்தது. "சபாஷ்..." "அப்பிடித்தான்..." "அதுதான்" பாராட்டத் தொடங்கி விட்டார் அவர். பேச்சாளருக்கும் நன்கு தெரியும் இவருக்கு ஆங்கிலம் தெரியாதென்று. ஆனால் தான் ஆங்கிலத்தில் பேசாவிட்டால் அது தனது 'இமேஜைக்' குறைத்து விடும் என்பதால் தொடர்ந்தும் ஆங்லத்திலேயே பேசினார்.

சிங்களம் படித்தால் பதவி உயர்வு என்ற நிலை வந்த காலத்தில், சிங்களம் படிப்பதுடன் மட்டுமல்லாது சிலர் தங்கள் பிள்ளைகளுக்கும் சிங்களப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார்கள். எதிர்காலத்தில் உத்தியோக வாய்ப்பு இலகுவில் கிடைத்துவிடும் என்பதே அவர்கள் எதிர்பார்ப்பு.

இந்தக் காலங்களுடன் ஒப்பிடுகையில் இன்றைய நிலை பெருமை தரக்கூடியது அல்லவா?

●●●

## ஐம்பொன்

*கோபத்தில் காரியம் செய்பவனும் புயலில் கப்பலோடுபவனும் சரிசமமானவர்கள்!*

*நேர்வழி நெடுந்தூரம்!*

*தீய பழக்கம் முதலில் யாத்திரீகன் போல் வரும். பின்பு விருந்தாளியாகி, அதுவே முதலாளியாகிவிடும்!*

*தற்போதைய கல்வி முறை கற்பவர்களிற்கும் கல்லாதவர்களிற்குமிடையில் ஒரு அகழியை ஏற்படுத்திவிட்டது!*

*மனிதன் உடலால் வளர்ந்த குழந்தை!*



படிப்பகம்

www.padippakam.com




காது நிறைந்த கணவன்



சுவை மீட்டல்



அரிசித்தட்டுப்பாடுகால ஆசீர்வாதம்

படிப்பகம்

www.padippakam.com

குறுமணி

## 'வீடியோ' வாய்மை

பக்கத்து வீட்டில், "வீடியோ" கருவியில் படம் போடப் போகிறார்களாம். அவளிற்கும் 'அழைப்பு' வந்தது. போனாள். அருமையான படம்-அரிச்சந் திரா; உண்மையெனும் வாழ்நெறியிலிருந்து இம்மியும் வழுவ மறுக்கிறான் மன்னன். அதனால் அவனுக்கு நேர்கின்ற இடர்களோ... அப்பப்பா..! ஆனாலும் இறுதியில் அவன் எய்துவது இன்ப நிலை. "வாய் மையே சிறந்தது" என்று போதித்து நிறைவுசெய்கி றது படம். அவள் வீடு திரும்பினாள். வாசலில் காத்து நின்றார் கணவர். அவர் தானா? வேலைக் குச் சென்றவர் இத்தனை விரைவில் எதிர்பார்க்க வில்லை அவள். கணவரின் முகத்தைக் கண்கொ ண்டு பார்க்கவே இயலவில்லை-காய்ச்சிய பாள மாக... கண்களோ அதனை அவ்விதமாக்கிய தணல்களாக அவளது உள்ளார்ந்தத்தில் உதறலெ டுத்தது. மெய்யும் லேசாய் பதறியது. கணவர் எரிந்து விழுந்தார். "எங்கை ஊருலாத்திப் போட்டு வாறாய்?" உடனடியாகப் பதில் சொல்லத் தோன்ற வில்லை. ஒரு நொடித் திணறல். 'வாய்மையே சிறந்தது' தான். ஆனால் இத்தகைய நிலையில்... அவள் சொன்னாள்: ரெண்டு மூண்டு சட்டை தைக் கவேண்டியிருந்தது, பக்கத்து வீட்டில குடுத்திட்டு வாறன்..."

செ. பொ. சிவனேஷ்

---



வைத்தியர்: "கால் வீக்கத்திற்கா வந்தீர்?"

நோயாளி: "இல்லை வேறு வருத்தத்திற்கு. உங்களுக்காகக் காவல் நிண்டதில் கால் வீங்கிப் போச்சு."

- அதிமதுரம்

## இன உணர்வு

நாதசுர நதியில் நீராட ரசிகர் கூட்டம் அலை மோதும். கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருக்க, ஒவ்வொருவரும் அந்தந்த ராகங்களின் பெயர்களைத் தமக்குள் பரிமாறிக்கொள்வார்கள் -

" இது கல்யாணி!"
"இது காம்போதி!"
"இது சிந்து பைரவி!"

இவ்விதமாய் நடந்தது ஒரு காலம்

இப்போதோ-

வானத்தில் விமானங்களின் இரைச்சல் கேட்டால் போதும் நமது சிறார்கள் ஆரம்பித்து விடுவார்கள்:

"இது அவ்ரோ!"
"இது சகடை!"
"இது ஹெலி!"

---

## நாய்வாலை நிமர்த்த முடியுமா?

ஒருவன் தன் குருவைப் பார்த்து எனக்கு எல்லா வேலையும் செய்யக் கூடிய ஒருவரை தாருங்கள் என்று கேட்டான். அதற்கு குரு 'அது ஒரு கஷ்ட மில்லை நான் ஒரு பிசாசு தருகிறேன். ஆனால் அதற்கு தொடர்ந்து வேலை கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் உன்னையே கொன்றுவிடும்; முடியுமா?" என்று கேட்டார்-அது மிகவும் சுலபம் என்றான் சீடன். சொற்ப வேளை யில் பிசாசு தோன்றி என்ன செய்ய வேண்டும், என்று கேட்டது. ஏதோ பல வேலைகள் செய்யும்படி அவன் ஆணையிட்டான். சொற்ப நேரத்தில் முடித் துவிட்டு வேறென்ன செய்யவேண்டும் என்று கேட் டது பிசாசு. வேறும் பல வேலைகளைக் கொடுத்து விட்டு குருவிடம் ஓடிப்போய், "நான் என்ன செய்ய அது எல்லாவற்றையும் சட்டென்று செய்கிறதே" என்றான். குரு சிரித்துவிட்டு அங்கே நின்ற நாயின் வாலை நிமித்தச் சொல்லி பிசாசிடம் கொடுக்குமாறு கூறினார். சீடனும் அப்படியே செய்தான். கதையின் படி இன்னும் பிசாசு நாயின் வலை நிமிர்த்திக் கொண்டு இருக்கிறது.

நன்றி:- மஞ்சரி


படிப்பகம்

www.padippakam.com

அறுகுடன் ஐந்து மணித்துளிகள்

# பேட்டி வைத்தியம்

மகா கனம் பொருந்திய அறுகாரே, உம்மை எங்க ளது வாசக நேயர்களுக்காக இம்முறை இப்பகுதி யில் பேட்டிகாண வந்துள்ளோம்.
வணக்கம்

உங்களைப் பற்றி எங்கள் வாசக நேயர்கள் முன் னரே தெரிந்தவர்கள்தான் இருந்தாலும், அவர்களுக் காக உங்கள் மேன்மை பற்றி ஒருமுறை கூறுவீர் களா?

"வினைகளைப் போக்குவதில் வல்லவரான விக் னேஸ்வரனுடன் என்னைப் போற்றுவார்களே தெரிந் ததுதானே உங்களுக்கு."

ஓகோ! மகா சன்னிதானம் அவர்களே! அவ்வளவு பெருமை வாய்ந்தவரான நீங்களே; பெருமை படத் தக்க செய்தி ஒன்றை கூறுங்களேன்.

"வினைகள் தீர்க்கும் விக்னேஸ்வரரே ஒரு முறை தன் அப்பனுக்காக யமன் மகன் சூரனைச் சங்கரித் தபோது அவனால் ஏற்பட்ட வெப்பினால்வெதும்ப நேரிட்டது. அப்போது எனது பிரயோகத்தினாலேயே அவருக்கு அதனின்றும் விமோசனம் அளிக்கப்பட் டது. இது பலரும் அறிந்த செய்தி"

அப்படியா சங்கதி, ஆச்சரியமாக இருக்கின்றதே! அப்படியானால் மக்களுக்கும் உம்மால், விக்கினங் களான பிணிகளின்றும் விமோசனம் அளிக்க முடி யுமல்லவா?

"அதில் என்ன சந்தேகம், பண்டைய மக்கள் தற் காலத்தவரை விட நோய், நொடி குறைந்தவர்களாக பூரண ஆயுசுடன் வாழ்ந்ததற்கு அவர்களது அன் றாட மூலிகைப் பிரயோகமே காரணம்: அவர்கள் தினம் தங்களது இறை வழிபாடு முதல் உணவுவரை மூலிகைகளையே கையாண்டு வந்தார்கள். அதில் நானும் முக்கிய இடத்தை வகித்து வந்தேன்."

நீங்களும் பெரிய சமர்த்தராகத் தெரிகின்றது. நீங் களோ ஒரு புல்லினத்தைச் சேர்ந்தவராச்சே, மெல் லியர் என்றல்லவாசிலர் நினைக்கிறார்கள்.

"நான் ஒரு புல்லினம்தான் மறுக்கவில்லை. இருந் தும் நான் பெரும் வீரியனாக்கும்."

வீரியனா? விளங்கவில்லை, கொஞ்சம்விளக்கம் தேவை?

"சகல விஷமும் தீருவதற்கு நான் கைகொடுப்பேன். முன்னர் சாப்பிட்டு வந்த மருந்துகளினால் உடம்பில் ஏற்பட்ட அனல், கடுப்பு பேதி இவைகளை நிறுத்தி குணமாக்குவேன். நரம்பு தளர்ந்தவர்களுக்கு அவை இறுகிப் பலப்பட நான் கைகொடுப்பேன். இவற்றை விடவும்........."

ஐயா புல்லினரே! பொறுத்தருள வேண்டும், தெரி யாத் தனத்தால் இப்படிக் கேட்டு விட்டேன். பல ருக்கும் பிரயோசனப் படத்தக்கதாக பதில் அமையட் டும்.

---

தொகுப்பு ஆ. க. செல்வநாயகம்

---

"பரவாயில்லை எப்படி சொல்லக் கேட்கிறீர்"

பத்திய பக்குவத்துடன் சொன்னால் நல்லாய் இருக் கும். எனது வேர், கட்டை. தளை என்ற எல்லா முமே (5 மூலம்) பிரயோசனமானவைதான். இருந் தும் தனித்தனியேனும் அவை பிரயோகிக்கப்பட விசேச குணமுண்டு.

அவற்றைப் பிரயோகிக்கும் விதத்தைச் சொல்லுங் கள், கட்டைக் கணு நீக்கி, ஒரு பிடியுடன், பதின் மூன்று மிளகு சேர்த்திடித்து அரைப்படி நீருடன் சேர்த்து காய்ச்சி அது அரையாழாக்காச்சுண்டக் கியாழமாக்கி, காலை-மாலை என இருவேளை பத்து நாட்களுக்குச் சாப்பிட்டு வர மேகசுரம், உள்ளனல், உடம்புச் சூடு யாவும் தீரும்,

ஆகா அற்புதரே!கட்டைக்கு இவ்வளவு குணங்களா? அப்படியானால் வேருக்கு?

"வேருக்கும் வீரம் உண்டு"

வீரம் உண்டென்றா சொல்லுகிறீர் அப்படியானால் வேட்டும் வைப்பீரோ?

"வேரைப் பசும் பாலில் அரைத்து, இருவேளையும் சாப்பிட்டு வந்தால் நீர்க்கடுப்பு, அஸ்தி வெட்டை, மூலவெட்டை என்பவற்றுக்கு வேட்டும் வைப்பேன். சகல விஷங்களினாலும் ஏற்படும் தோஷங்களை



படிப்பகம்

www.padippakam.com

முறிப்பேன். தளர்ந்த நரம்புகளை இறுக்கிப் பலப்படுத்தி வீரியம் மிக்க நல்ல வீரனாக்குவேன்.

உண்மையில் வேட்டுவைக்கத் தெரிந்த வேங்கை தான் நீங்கள். வெட்டைக்கு வேட்டுவைப்பது போல் வெள்ளைக்கு?

சமூலமும் மிளகும் சமன் எடை வைத்து வெண்ணெய் போல் அரைத்து இரு வேளையும், கொட்டைப்பாக்களவு பத்து நாட்கள் சாப்பிட்டு வர வெள்ளை தீரும். வறுத்த உப்பு சுட்ட புளி பத்திய மாகட்டும்.

மகா புனிதரே மறந்து விட்டேன். முன்னர் சாப்பிட்ட மருந்துகளின் முறிவிற்கு?

வேர் ஒரு பங்கும் மிளகு ஐந்து பங்கும் எடுத்து மிளகை நொறுக்கி சேர்த்து அவித்து கியாழமிட்டுக் கொண்டு, பனங்கற்கண்டு, மாதுளம்பூ, கூகை நீறு இலைகள் கொஞ்சம் கொஞ்சம் எடுத்து நெய்விட்டு அரைத்து, முன் கியாழத்துடன் கலந்து இரு வேளையும் மூன்று நாட்கள் சாப்பிட்டு வர, எந்த வித மருந்து சாப்பிட்டதினால் ஏற்பட்ட உடம்பு அனல், கடுப்பு, பேதி எல்லாம் நிவர்த்தியாகும்.

மகா சூரனையா நீர்! மதிக்கிறோம், மக்களை சனி பிடித்தாற்போல் பிடிக்கும் சன்னி வியாதிக்கு ஏதேனும் வழி சொல்லுவீரா?

சூரண முண்டு, எனது கிழங்கை சூரணித்து அதாவது உலர்த்தி இடித்து அரித்து எடுத்துக் கொண்டு, சமன் எடை சீனி சேர்த்து இருவேளையும் மண்டலக் கணக்காய் (சாப்பிட்டு வர இத்தோஷம் எனும் சன்னி நீங்கி தேகம் தணிந்து பழுதாய்ப் போன மேனி மீண்டும் உண்டாகும்.

இவ்வளவு அருமை பெருமைகளைக் கொண்ட நீங்களா இவ்வளவு அடக்கமாக இருக்கிறீர்கள். உங்கள் ஆளுமையை எங்கள் வாசகர்கள் அறியத் தக்கதாக இந்தப் பேட்டி தந்தமைக்காக வாசகர் சார்பில் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

வணக்கம்.

---

**பேட்டி வைத்தியம் 11 ஆம் பகுதிக்காக அடுத்தமுறை அருமருந்துப் பொக்கிஷமான 'அத்தி' யைப் பேட்டி காணுகிறார் ஆ. க. செ அவர்கள்.**

**ஆசிரியர்.**

---

## காடுவரை பிள்ளை?

பிள்ளைகள் நால்வரும் ஜேர்மனியில்
பெற்றவளும் உதவிக்குச் சென்றுவிட்டாள்
தள்ளாத வயதினிலே தனிமை வாட்ட
தந்தையும் கவலையால் உயிரை விட்டார்
கொள்ளிவைக்க வருமாறு கொழும்பு சென்று
'கோல்' எடுத்து அயலவர் சொன்னபோது
உள்ளபடி சடலத்தை விமானத்தில்
உடன் அங்கு அனுப்புமாறு சொல்லிவிட்டார்.

- யோ. நாதன்

---

## Mr & Mrs டாமோடிரன்



Mrs. டாமோடிரன்: டார்லிங். .
Mr. டாமோடிரன்: யேஸ் டார்லிங்?
Mrs. டாமோடிரன்: வட் இஸ் புற்பாய் டார் லிங்?

Mr. டாமோடிரன்: இது தெரியாதா டார்லிங். . அது கோப்பாய், மானிப்பாய், சண்டிலிப்பாய் மாதிரி ஒரு ஊர் டார்லிங்.

---


படிப்பகம்

www.padippakam.com

# போகும் இடம்

சுதாராஜ்

கடைசியாக; அம்மா கொழும்புக்கு வந்துசேர்ந்தாள். கடைசியாக என்று சொன்னால், அம்மா தனது வாழ்க்கையின் கடைசிக் கட்டத்தில் கொழும்புக்கு வந்து சேர்ந்தாள் என்று அர்த்தமல்ல... ஒரு வகையிற் பார்க்கப்போனால் இது அவள் வாழ்வின் கடைசிக் காலமும் தான்!

சரிக்குச் சரி நாலு ஆண்களும், நாலு பெண்களுமாக எட்டுக் குஞ்சுகளைப் பெற்றவள் அம்மா. 'பிள்ளைகள் வளர்ந்துஆளாவதைப் பார்க்க முன்னரே மனிசன் போய்ச் சேர்ந்திட்டுதே' என்ற கவலையும் ஏக்கமும் அம்மாவுக்கு எப்போதும் உண்டு. எனினும் அப்பா இல்லாதகுறையே தெரியாமற்தான் பிள்ளைகளை வளர்த்தவள் அம்மா. வளர்ந்து ஆளானதும் பிள்ளைகள் அம்மாவை விட்டுப் பறந்து போயின. ஒரு பிள்ளையின் நல்ல காரியத்தையேனும் அம்மாவுங்குப் பார்க்கக் குடுத்து வைக்கவில்லை. பார்சலில் அனுப்புவது போல பெண்பிள்ளைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டியதாயிற்று!

இத்தனை பிள்ளைகளைப் பெற்று வைத்துக் கொண்டு அம்மா எத்தனையோ கனவுகளைக் கண்டிருக்கின்றாள். ஒரு காலத்தில் எல்லாம் பெற்றுப் பெருகி தன்னைச் சூழ இருப்பதையும், பேரப் பிள்ளைகளுடன் கொஞ்சிக்குலாவுவதையும் கற்பனைக் காட்சிகளாக கண்டிருக்கின்றாள். இப்போது போட்டோக்களில் மட்டும்தான் அவர்களைக் காணமுடிகின்றுது.

கனடாவில், ஜேர்மனியில், பிரான்சில் இருந்தெல்லாம் கடிதங்கள் வரும்.... அன்புள்ள அம்மாவுக்கு -அம்மா வீட்டோடு தனிய இருப்பது பிள்ளைகளுக்குக் கவலையாம். நாட்டுப் பிரச்சனைகள் இவ்வளவு மோசமாக இருப்பதால் -அம்மாவின் பாடு எப்படியோ என்று யோசனையாக இருக்கின்றதாம். வடபகுதிக்குச் சாப்பாட்டுச் சாமான்கள் வரத்தில்லை. இனிமேலும் இருந்து கஷ்டப்படாமல் எப்படியாவது 'அந்தப்பக்கம்' வந்துவிட்டால் நிம்மதியாக இருக்கலாம்.

அம்மாவின் மனது இதற்கொல்லாம் மசியாமற்தான் இருந்தது இந்த ஊரையும் வீட்டையும் விட்டு அம்மா போகமாட்டாள், "நீங்கள் எங்கையெண்டாலும் நல்லாயிருங்கோ பிள்ளையள் .... என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்"என ஒவ்வொரு முறையும் பதில் எழுதுவாள்.

என்ன நேர்ந்ததோ.... பிள்ளைகளைக் காணாமலே கண்களை மூடிவிடுவேனோ என்ற பயம் அம்மாவுக்குத் தோன்றத் தொடங்கியது. அந்த நினைவில் பைத்தியமே பிடித்திடும் போலிருந்தது. இந்தக் கடைசிக் காலத்திலாவது பிள்ளைகளுடன் போயிருக்கலாமே என்ற ஆசை முளைவிட்டது.

## சிறுகதை

கொழும்கிலிருக்கும் மூத்த மகன் ஊருக்கு வருகிறவர்களிடம் கடிதங்கள் கொடுத்துவிடுவான். தம்பிமார், தங்கைமார் ரெலிபோனில் கதைக்கிறவர்களாம்...." அம்மா கொழும்பிலாவது வந்து நின்றால் பிறகு தங்களோடு கூப்பிட்டுக்கொள்ள வசதியாக இருக்-குமென்று"... அவர்கள் யாரும் ஊரோடு வரப் போவதில்லை... தானாவது போய்ச்சேரவேண்டியதுதான். கொழும்புக்குப் போனால் மூத்த மகனின் பிள்ளைகளையாவது பார்க்கலாம் என, அம்மா கடைசியாகத் தன் மனதை மாற்றிக் கொண்டு இந்தத் தள்ளாத வயதில் கொழும்புக்கு வந்து சேர்ந்தாள் .......

எழுத்தாளர் சுதாராஜ் அவர்கள் சென்ற ஆண்டு, தமிழகச் சஞ்சிகையான' 'ஆனந்த விகடன்' நடாத்திய 'விழிப்புணர்வு' சிறுகதைப் போட்டியில் பரிசைப் பெற்றவர். தற்போது அக்கதைமிழகத்தில் தொலைக்காட்சிக்கென படமாக்கப்படவிருக்கின்றது. 'சிரித்திரன் பண்ணையில்' வளர்ந்த சுதாராஜ் அவர்களின் இன்றைய மேன்நிலை கண்டு பூரிப்படைகிறோம்; மென்மேலும் வளர வாழ்த்துகின்றோம்! அவரது புதியதொரு சிறுகதையை இம்முறை வாசகர்களுக்களிப்பதில் பெருமையடைகின்றோம்.

- ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com




* திருமண வைபவங்கள்
* பிறந்த தின விழாக்கள்
* பொது நிகழ்ச்சிகள்
* வீடியோ திரைப் படங்கள்




எவையாயினும் கலைவண்ணத்துடன் ஒளிப்பதிவு செய்திட

பிரான்ஸில் என்றும் உங்கள் நினைவுகளில்,



TELE MOVIE

K.K.S



பாரீஸில் தயாரிக்கப்பட்ட திரைக்காவியமான
'விடுதலைப் பாதையில்...' மூலம்
திரைப்பட ஒளிப்பதிவாளர்களாகவும்
அறிமுகமாகிப் புகழ் பெற்றவர்கள்

கே. கே. எஸ் ரெலி மூவி ஸ்தாபனத்தினர்

K. K. S TELE MOVIE

25, Rue BISSON, 75020 PARIS.

தொடர்புகட்கு: 43 58 15 59 / 47 91 43 15


படிப்பகம்

www.padippakam.com

மூத்த மகன் கட்டியது முறைமாமியின் மகளைத் தான். மாமி குடும்பத்தினர் கன காலத்திற்கு முன்னரே கொழும்பில் செற்றில்ட் ஆன ஆட்கள். மாமியின் மகளை கட்டியதால் மகனின் வாழ்க்கையும் கொழும்போடு சேர்ந்துவிட்டது.

......அம்மாவைக் கண்டதும் கொழும்பு மாமி ஆரத்தழுவினாள். மருமகள் ஓடிவந்து கட்டியணைத்துக்கொண்டு கண்கள் கலங்கினாள்.

"எப்பிடிமாமி இதுக்குள்ளாலை வந்து சேர்ந்தனீங்கள்..... சரியான கஷ்டமாமே?"
"வள்ளத்திலையெல்லாம் வரவேணுமாமே.....? சரியான சேறும் சகதியுமாம்!..... நீங்களும் அப்பிடியா வந்தனீங்க?" எனக் கேட்டு மாமி, அருவருப்புணர்வில்..... சீவியத்திலேயே சேறையும், சகதியையும் காணாத மனிசியைப்போல முகத்தைச் சுழித்தாள். மகன் அம்மாவைக் கண்டதும் கண்ணாடியைக் கழற்றிக் கண்களைத் துடைத்தார்.

அம்மாவை எல்லோரும் விசித்திரமாக... அல்லது ஏதோ சாதனை புரிந்தவரைப் பார்க்கிற பிரமிப்புடன் பார்த்தார்கள். அவர்களைப் பொறுத்தவரை இத்தனை குண்டுவீச்சுக்களுக்குள்ளும் இவ்வளவு காலமும் நிண்டுபிடித்தது, இந்தப்பாதையால் வந்து சேர்ந்தது எல்லாமே சாதனைகள்தான்.

அம்மாவின் வருகையால் எல்லோரும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தப்பட்டவர்கள்போல் தோன்றினார்கள். அம்மாவுக்காக விசேடமாக சமையல் செய்யப்பட்டது. சாப்பாட்டை மேஜையிற் கொண்டுவந்து படைத்தார்கள். அம்மாவைக் கதிரையில் அமரச் சொன்னார்கள். மாமி, மருமகள், மகன், பிள்ளைகள் எல்லோரும் வட்டமாக அமர்ந்தார்கள். அம்மாவுக்குக் கூச்சமாக இருந்தது. மகனும், மருமகளும், நான், நீ என முந்திக்கொண்டு அம்மாவுக்குப் பரிமாறினார்கள்.

அம்மா தேடுவாரில்லாமற் கிடந்தவள். நினைத்த நேரம் சமைப்பாள், நினைத்த நேரம் சாப்பிடுவாள். யாரும் சாப்பிட்டாயா, கிடந்தாயா என்று கூடக் கேட்பதில்லை. சோற்றுக்கோப்பையைக் கையிலேந்தி சுவரோடு சாய்ந்து முழங்கால்களை மடக்கி அடக்கமாக இருந்தவாறு உண்பாள். இப்போது இந்த அபரிதமான கவனிப்பும், கதிரையும் அம்மாவுக்கு கூச்சமாக இருந்தது.

"விடு பிள்ளை!.... நான் போட்டுச் சாப்பிடுறன்!"

அவர்கள் விடுவதாயும் இல்லை. அம்மாவுக்குச் சாப்பாடு இறங்குவதாகவும் இல்லை.

வீட்டில் நடக்கும் கூத்துகளைப் பார்த்தால் அம்மாவுக்கு இந்த லோகத்திலா இருக்கிறோம் என எண்ணத் தோன்றியது.



**யசோ:** அன்ரி, பூமாலைகளால் சோடித்த விமானத்தில் ஜேர்மனி போகக் கனாக் கண்டனான்.

**அன்ரி:** யாருக்கோ மணப்பெண்ணாக ஜேர்மனி போகப் போறாய் போல.

**- அதிமதுரம்**

ஒவ்வொரு தேவையும் ஒவ்வொரு சுவிச்சைப் போடக்கிடைக்கிறது! அடுப்பிக்கு விறகு தேடிக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஒரு சுவிச்சைப் போட்டு கறி சமைக்கலாம்! 'பாத்றூமை' எப்படிப் பாவிப்பது, எப்படி 'ஃப்ளாஷ்' பண்ணுவது என்றெல்லாம் மருமகள் காட்டித் தந்தாள். அம்மாவுக்கு இதெல்லாம் ஒத்துவருமா என்று சந்தேகமாக இருந்தது. கிணற்றிலே வாளியால் அள்ளிச் சோரக் குளிப்பதுபோல் வருமா?

அம்மாவுக்கு கொழும்பு கைலாயபுரியைப்போல் இருந்தது. அம்மா கைலாயபுரிக்குப் போனவளல்ல. அவளது ஞானத்துக்கு எட்டியவரை கைலாயபுரி என்பது சகல செளபாக்கியங்களும் நிறைந்த இடம். பகலைப்போல வெளிச்சம் இரவிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கும்.

ஊரின் இருள் சூழ்ந்த இரவுகளுடனும், பொழுதுபடுமுன்னர் அடங்கிப்போகும் வாழ்க்கையுடனும் இந்த "இரவாகியும் முடியாத பொழுதுகளை" ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்கமுடியவில்லை. அம்மாவின் மனதில் என்னவென்று புரியாத ஒருவித சோகம் நெருடுவதுபோல் இருந்தது.

- "அம்மாவுக்கு நல்ல படமொன்று போட்டுக்காட்டுங்கோ" என மாமி சொன்னாள். வீடியோவும் ரீவியும் அம்மா காணாத விசயங்களாய் இருக்கும்

படிப்பகம்

www.padippakam.com

என்று ஒரு விளையாட்டு உணர்விற்குத்தான் மாமி இப்படிக்கூறினாள். 'அம்மா, குண்டுவீச்சுக்கள்,

சண்டைகள் நடந்த இடங்களில் இருந்தமையால் மன அதிர்ச்சியடைந்திருக்கக்கூடும்... இப்படிப் படம் பார்ப்பதுபோன்ற வேறு பிராக்குகளில் ஈடுபட்டால் மனம் இலகுவடையும் " என்று மருமகள் உற்சாகமாக படத்தைப் போட்டாள்.

சிம்மாசனத்தில் அமர்ந்திருப்பதுபோல நெடுநேரம் கதிரையில் அமர்ந்திருப்பது. அம்மாவிற்கு கஷ்டமாய் இருந்தது. கால்களை மடக்கிக்கொண்டு சுவரோரமாக சாய்ந்திருப்பதில் உள்ள சுகம் இதில் இல்லை. தேவையானபோது கால்களை நீட்டலாம் -மடிக்கலாம். அம்மாவுக்கு நாரிக்குள் பிடிப்பதுபோல் இருந்தது.

"நான் கீழை இருக்கிறன்... பிள்ளை!" எனத் தனது ஆசையை மெல்ல வெளியிட்டாள்.

இதைக்கேட்டு மாமி துடித்துப்பதைத்துப்போனாள்.

"நல்ல கதை பேசுறீங்க!.... யாராவது பாத்தினமெண்டால் என்ன நினைப்பினம்?.... வெளிநாட்டுக்குப் போனால் கதிரையில்தானே இருக்க வேண்டிவரும்?.... இப்பவே இருந்து பழகுங்கோ!
நீண்டநேரமாக அப்படியே இருக்கமுடியவில்லை. படமும் முடியாமல் நீண்டுகொண்டிருந்தது. அம்மாவின் கால்கள் விறைப்பெடுத்தன. அக்கம்பக்கம் பார்த்தாள் -எல்லோரும் படத்தில் லயித்துப்போயிருந்தார்கள். ஒரு காலை மெல்ல மடக்கி கதிரை விளிம்பில் பாதத்தைப் பதித்தாள்.

மாமிக்கு இதற்கொரு நேரம் தேவைப்படவில்லை... எப்படிக்கண்டாளோ! சற்றும் தாமதியாமல் மருமகனிடம் முறையிட்டாள்; "உங்கட அம்மா செய்யிற வேலையைப் பாருங்கோ!" மகன் தனது மானமே பறிபோனவன்போல,

"என்னம்மா இது?... டீசன்ராய் இருக்கத்தெரியாதே!.... கதிரை என்னத்துக்கு உதவும்?... காலைக் கீழை போடுங்கோ!" என்றார்.

பிள்ளைகளின் சௌகரியத்துக்காக அம்மா எத்தனையோ தியாகங்களைச் செய்திருக்கிறாள். இது என்ன பெரிய விசயம்? மகனின் சந்தோசத்துக்காக அம்மா காலை கீழை போடவும் தயார்!..... தலையை கீழை போடவும் தயார்.

காலையில், அம்மா வீட்டுநினைவுகளில் ஆழ்ந்து போயிருந்தாள். ஊரில் எதையோ விட்டுவந்ததைப் போன்றதொரு தவிப்பு மனதை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அப்போது மிகப் பதிவாக ஒரு பிளேனின் இரைச்சல் கேட்டது. அம்மா பதறிக்கொண்டெழுந்தாள் -

"பிள்ளை!... பிள்ளை! பிளேன்!.... பிளேன்! பிள்ளையள் எங்கை?" என ஓடிப்போய் பேரப்பிள்ளைகளைத் தூக்கினாள்.

இதைப் பார்த்து வீட்டில் எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

"என்ன மாமி? இன்னும் ஊரிலை இருக்கிறதாய் நினைவோ? " என மருமகள் கேட்டாள்.

"பிளேன்... இஞ்சை ஒண்டும் செய்யாது... பயப்படாதையுங்கோ!" என மாமி சொன்னாள். அதில் ஒருவித ஏளனம் தொனிப்பது போலுமிருந்தது.

எனினும் மாமி சொன்னது ஒரு பெரிய உண்மை என அம்மா நினைத்தாள். பறவை பறக்கும்போது எச்சமிட்டுச் செல்வதுபோல.... ஓர் இலக்கில்லாமல் எத்தனையோ குண்டுகள் விமானம் அங்கே போட்டிருக்கிறது. அப்படி இந்தப் பக்கங்களில் அது ஒருபோதும் குண்டுபோடாது என்பது உண்மைதான். தென்பகுதியிலும் தீவிரவாதப் பிரச்சனைகள் இருப்பதாக பத்திரிகை செய்திகள் சொல்வது அம்மாவுக்குத் தெரியும். அப்படிச் சொல்லிக்கொண்டு இங்கெல்லாம் விமானம் குண்டுபோடத் துணியுமா? அம்மா கற்பனை செய்து பார்த்தாள்.... விமானங்கள் சுற்றிச் சுற்றி வந்து குண்டு போட்டால் இந்த மக்களெல்லாம் எப்படிக் கதிகலங்குவார்கள்! அலுவலகங்கள் எல்லாம் அல்லோலகல்லோலப்பட்டு ஸ்தம்பித்து விடும்! குண்டு பட்டுச் சிதறிப்போனவர்களை அப்புறப்படுத்திவிட்டு மீண்டும் மார்க்கட் கூடுவதுபோல இங்கு கூடாது! குண்டு எந்தப்பக்கம் விழக்கூடும் என அண்ணாந்து பார்த்துக்கொண்டே சைக்கிளில் போகும் துணிவு இங்கு யாருக்கும் வராது!



அழகேசர்: குமணக் கப்பல் எண்ணை சுணங்கி வருகுது?

முருகேசர்: கவலைப் பாரத்தை தூக்கி வாற கப்பலெண்டபடியால் சுணங்கி வருகுது.

- ஜோக்கிரட்டீஸ்



படிப்பகம்

www.padippakam.com

- அம்மாவுக்கு சற்று குழப்பமாக இருந்தது. எல்லா விசயங்களையும் ஏன் ஊர் நிகழ்வுகளோடு மனம் ஒப்பிட்டுப் பார்க்கிறது என நினைத்தாள். ஊரிலிருந்து வந்துவிட்டாலும் தான் இன்னும் அங்கிருந்து விடுபடவில்லையா? அல்லது ஊரில் மக்கள்படும் அவலத்தை எண்ணி மனங்கலங்குகிறதா? அல்லது... ஒரு தேசம் என்று சொல்லிக்கொள்பவர்களின் இருவேறு மாதிரியான நடைமுறைகளைக் கண்டு மனது தாங்கவில்லையா?

அம்மா யோசனையிலாழ்ந்தாள். பிளேனைக் கண்டு அம்மா பயந்து போய்விட்டாள் என்றே மருமகள் கவலைப்பட்டாள்.

"யோசியாதையுங்கோ!.... இனியென்ன.... வெளிநாட்டுக்கு பிள்ளையளிட்டைப் போயிட்டால் இந்தப் பயம் ஒண்டுமில்லைத்தானே?"

கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற இடங்களிலுள்ள பிள்ளைகளுக்கு அம்மா கொழும்பு வந்து நிற்கும் செய்தி சொல்லப்பட்டதால் எல்லோரும் அடிக்கடி ரெலிபோனில் கதைத்தார்கள். ஒவ்வொருவரும், தங்களோடு அம்மா வந்து இருக்கவேண்டுமென்றும், கடைசிக்காலம் வரையும் அம்மாவை ஒரு குறையுமில்லாமல் வைத்துப் பார்ப்பதாகவும் சொன்னார்கள். பிள்ளைகளின் அன்பில் அம்மா திளைத்தாள். ஒரு கதைக்குச் சொல்வதானால் கொழும்புக்கு வந்த நாள்முதலே அம்மாவுக்கு ஒரு வித அன்புத் தொல்லைதான். அடுத்த வேளைக்கு என்ன செய்யலாம் என்று போட்டுடைக்கத் தேவையில்லை. நேரத்துக்கு நேரம் சாப்பாடு கிடைக்கிறது.... தேநீர் கிடைக்கிறது. எனினும் அம்மாவுக்கு எதையோ இழந்துவிட்டகுறை. அது என்ன?.... அது என்ன?

அம்மாவுக்குச் சும்மா இருந்து பழக்கமில்லை. இந்த அறுபத்தெட்டு வயதுவரை அது அவளுக்குச் சாத்தியப்படவுமில்லை. பிள்ளைகளைப் பெற்று வளர்த்த காலங்கள் அம்மாவுக்கு இன்னும் நினைவிருக்கிறது. அதிகாலை நாலுமணிக்கே எழுந்துவிடுவாள். நாள் முழுவதும் ஓயாத வேலையில் மாய்ந்து.... படுக்கைக்குப்போக இரவு பன்னிரண்டு.... ஒரு மணியாகிவிடும். தனது வாழ்க்கையில் ஓய்வு என்பது வரவே வராதா என ஏங்கியிருக்கிறாள் . இப்போது அம்மாவுக்கு ஒருவகையில் ஓய்வுதான்; சும்மா இருப்பது, ஆனால் இது அம்மாவுக்குச் சுகமாயில்லை. தனது உயிர் வாழ்வுக்காக இன்னொருவர்மேல் தங்கியிருப்பது போலிருக்கிறது. இன்னொருவர் கையை எதிர்பார்த்துக்கொண்டிருப்பது என்ன வாழ்க்கை? தண்ணீரென்றாலும், சாப்பாடென்றாலும் மற்றவர் இட்டபோதுதானே? தானாக இயங்குவதிலுள்ள தன்மான உணர்ச்சியற்ற வாழ்க்கை உப்புச்சப்பற்ற சாப்பாடுமாதிரித்தானே? 'மகனும் உறவினர்களும் வேறு ஆட்களா? அவர்களை இன்னொருவராகக் கருதுவது தவறோ' என்றுகூட அம்மா நினைத்தாள். ஆனால்... இயல்பாக மரங்களூடு வீசி வந்து ஓராட்டும் காற்று இங்கு இல்லை. விசிறியின் சுவிச்சைப்போட்டு காற்றை செயற்கைத் தனமாக எடுப்பதுபோல மனிதர்களின் உறவுகளும் போலித்தன்மையானதா என்று அம்மாவுக்குச் சந்தேகம் தொடுகிறது.

அலுப்புத்தீரப் படுப்பதென்றாலும் மற்றவர்களைத்தான் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். சிறியவீடு - அறை வசதி குறைவாகையால் அம்மா முன் விறாந்தையில்தான் படுப்பாள். விறாந்தை.... வீட்டின் பொது நிகழ்ச்சிக்குரிய இடம். மற்றவர்கள் வீடியோப் படம் பார்த்து முடியும்வரை காத்திருக்க வேண்டும். அதன் பின்னர்தான், அம்மாவுக்கு பாயைக் கொண்டு வந்து போட்டு விடுவார்கள். ஒவ்வொரு நாளும் இப்படியே தூங்கிக்கொண்டிருக்க அம்மாவினால் இயலவில்லை. ஒரு நாள் அம்மா அறையிலிருந்து பாயை எடுத்துவந்தா 'அவையள் படத்தைப் பார்க்கட்டும்... நான் ஒரு பக்கமாய்ப் படுப்பம்!' என்ற எண்ணம்.
அம்மா பாயுடன் வருவதைக் கண்டதும் மாமியின் முகம் ஓடிக்கறுத்தது!

"இதென்ன ஒரு மனேஸ் தெரியாத மனுசி!" எனச் சினங்கொண்டாள். மகன் ஓடிவந்து பாயைப் பிடுங்கிக்கொண்டு உள்ளே போனான். "அலுப்பாயிருக்கு... ராசா!" என அம்மா சமாளித்தாள்.

"என்னம்மா நாள் முழுவதும் வேலை செய்யிற எங்களுக்கே அலுப்பில்லை... சும்மாயிருக்கிற உங்களுக்கு என்ன அலுப்பு?"

இரவு பகலென்றில்லாமல்.... ஒரு அலுப்புச் சலிப்பென்றால் அம்மா திண்ணைக்குந்தில் சேலைத் தலைப்பை விரித்து கையைத் தலைக்குக் கொடுத்துக் கொண்டு சிவனே என்று படத்துவிடுவாள் - ஊரில் ஒரு கண்ணுறக்கம் கொண்டு எழுந்தால், அலுப்பு இருந்த இடம் தெரியாமற் பறந்துவிடும்.

இங்கையும் ஒரு நாள் பகற்பொழுதில் அம்மா அப்படி இயல்பாகப்படுத்துவிட்டாள் -மகனும் மருமகளும் வேலைக்கு போய்விட்ட நேரம், பிள்ளைகள் ஸ்கூலுக்கு; மாமியும் வெளியே எங்கோ போயிருந்தாள். அம்மாவுக்கு கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்தது.... பல நாட்கள் ஏங்கித் தவித்த தனிமை! அப்படியே சேலைத் தலைப்பை விரித்துச் சரிந்து விட்டாள்.

படிப்பகம்

www.padippakam.com


# காயத்திரி

தரமான இலங்கை, இந்திய, வியட்னாம் மளிகைப் பொருட்களை
மலிவாக விற்பதில் மக்கள் மனதில்
மங்காத இடத்தைப் பெற்றவர்கள்.

ஓடியோ, வீடியோ, கொம்பக்டிஸ்க்
மற்றும் வார, மாத பத்திரிகைகள், சஞ்சிகைகள்
அனைத்திற்கும் என்றும் நாடுங்கள்

**GAYATHIRY S.A.R.L.**

[IMPORT - EXPORT]

Tel: 42 09 22 43
Fax: 46 07 90 34

210 Rue du Fg. St. Denis,
75010 Paris.

# துர்க்கா சலூன்

உங்கள் அழகை மேலும் பொலிவுறச் செய்யும் வகையில்
* சிகையினை அலங்காரம் செய்து கொள்ளவும்
* சிகையினை நிறமேற்றிக் கொள்ளவும்
அனுபவம் மிக்க தொழில் வல்லுனர்களின் சேவையுடன்
உங்களை அழைப்பவர்கள்

**DURKAA SALON S.A.R.L.**

28, RUE LABAT
75018 - PARIS

TEL: 42 64 12 03
(Mo: MARCADET POISSIONNIERS)

**THAARINI VIDEO AND JEWELLERS**

TEL: 42 59 01 72

87, RUE CLIGNAN COURT
75018 - PARIS
METRO:
MARCADET POISSONNIERS or JULES JOFFRIN

www.padippakam.com

.... காலில் யாரோ தட்டியது போலிருந்தது. விளித்துப்பார்த்தாள்... முன்னே விஸ்வரூபம் எடுத்துக்கொண்டு மாமி!

என்ன இது ? யாராவது இந்த வீட்டுக்கு வந்து பார்த்தால் என்ன நினைப்பாங்க? ... இது என்ன வீடா, சத்திரமா? "

மாமி தனது காலினால் தான் தன்னை தட்டி எழுப்பியிருக்கிறாள் என்பதை உணர்ந்தும் அம்மாவிற்கு என்னவோ செய்தது! மனதுக்குள்ளே கிடந்து குமைச்சல் எடுத்தது -அம்மா யாருக்கும் அதைச் சொல்லவில்லை. மகனுக்குச் சொல்வதால் எதாவது தீர்வு கிட்டும் என்று நம்பிக்கையில்லை. மருமகள் நல்ல பிள்ளை -இதை அறிந்தால் கவலைப் படுவாள் சொல்லவேண்டாம்.

மாதங்கள் இரண்டுக்குமேல் ஓடியும் அம்மா வெளிநாட்டுக்கு போகிற காரியங்கள் எதுவும் ஒழுங்காக நடக்கவில்லை. வந்த நாட்களில் அடிக்கடி ரெலிபோனில் கதைத்த பிள்ளைகளும் இப்போது எப்போதாவது ஒருமுறை கதைக்கிறார்கள். கனடாவிற்கா, ஜேர்மனிக்கா எந்தப்பிள்ளை அம்மாவைக் கூப்பிடப்போகிறான் என்ற உடன்பாடும் அவர்களுக்குள் வரவில்லை.

"இவங்கள் நேரகாலத்துக்கு கூப்பிடவும் மாட்டாங்கள்... செலவு சித்தாயத்துக்கெண்டும் ஏதாவது அனுப்பமாட்டாங்கள்" -ஒரு நாள் இரவுச் சாப்பாட்டு மேசையில் மகன் இவ்வாறு கூறினார்.

அம்மாவுக்குச் சாப்பாடு இறங்கவில்லை. என்னவோ செய்தது. அம்மா மகனுக்கு பாரமாய் இருக்கிறாளா?

"கனடாவுக்குப் போவதானால்... விசா ஒழுங்கு முறையெல்லாம் சரிப்பட்டுவர இன்னும் இரண்டுவருடங்களாவது செல்லுமாம். ஜேர்மனிக்குப் போவதானால் ஏஜென்சிக்கு எக்கச்சக்கமான காசு கட்டினால் கள்ளமாகக் கொண்டுபோய் விடுவார்கள் - "அகதி" என்று சொல்லி அந்த நாட்டுக்குள் நுழையலாம்!"

அம்மாவுக்கு என்னவோ செய்தது. அம்மா அகதியா?

அம்மாவுக்கு அந்தக் கணக்கில்.... தான் போகவேண்டிய இடம் எங்கே என்பது தெளிவாகத் தெரிந்தது. தான் இழந்துபோய்த் தவிப்பது, தனக்கு வேண்டியது எது என்பதும் புரிந்தது.

"பிள்ளை.... நான் ஊருக்குப் போகப்போகிறேன்!"

மருமகள் அதிர்ந்துபோனாள். அவளுக்குக் கவலையாய் இருந்தது.

"அப்பம்மாவை.... போகவேண்டாம் எண்டு சொல்லுங்கோ!" எனப் பிள்ளையளுக்குச் சொன்னாள்.

பிள்ளைகள் அழுதனர்.

"அப்பம்மா போகவேண்டாம்..... நில்லுங்கோ..!"

"மனசார உன்னை விட்டுப்போறதெண்டால்.... கவலையாத்தான் இருக்குப் பிள்ளை.... எண்டாலும் நான் கட்டாயம் போகத்தான் வேணும்!"

இரவு மருமகன் வந்ததும் வராததுமாக மாமி தீ மூட்டினாள்.

"நாங்கள் இங்க என்ன கொடுமை செய்யிறம்....? அம்மா ஊருக்குப் போகப் போறாவாம்!....

.... உங்கட மற்ற பிரதேஸ் நினைப்பினம் நாங்கதான் கலைச்சுப்போட்டமாக்குமெண்டு!"

மகன் அம்மாவுக்கு சமாதானம் சொல்லிப் பார்த்தார். அம்மா கேட்பதாய் இல்லை. மகனின் சினம் தலைக்கு ஏறியது.

"என்னம்மா, நாடு இருக்கிற நிலையில வாறதும் போறதுமெண்டால் லேசுப்பட்ட காரியமா.... இத்தனை வயசுக்குப் பிறகும்.... நீங்க நினைச்சமாதிரி ஆடவேணுமெண்டு நாண்டுகொண்டு நிண்டால் என்ன செய்யிறது?"

அம்மாவுக்குப் பரதநாட்டியம் தெரியாது, குச்சுப்பிடி பற்றிய அறிவும் இல்லை. வேறு எவ்விதமான ஆடற்கலையும் பழகியவளல்ல. ஆனால் நிறைய ஆட்டக்காரிகளைப் பார்த்திருக்கிறாள். ஆடி ஓயும் வரை பார்த்திருக்கிறாள். அது அம்மாவை எவ்விதத்திலும் பாதிப்பதில்லை.

நிலம் விடியத் தொடங்கியது. அம்மா தனது வீட்டை நோக்கிய பயணத்திற்கு ஆயத்தமானாள். மகன் அழாக் குறையாகச் சொன்னார்;

"தாண்டிக்குளத்திலை பிரச்சனையாம்... வவுனியாவுக்கு அங்கால போகேலாது... என்னெண்டு போகப்போறியள்?"

"நான் எப்படியும் போயிடுவன் ராசா... நீங்கள் கவலைப் படாதையுங்கோ!"

மருமகள் மன்றாட்டமாகக் கேட்டாள்;

"மாமி! கட்டாயம் போகத்தான் வேணுமோ? எங்களோட நில்லுங்கோ!

அம்மா சொன்னாள்;

"தனியத்தனிய இருந்தால் ஒராளுக்கொராள் பட்சமாயிருக்கலாம்!"

www.padippakam.com

# நேயம் நயந்தவை

## (வாசகர் கடிதம்)

■ **சிரித்திரன் ஆசிரியர் அவர்கட்கு!**
சிந்தனைக்குச் சிறுகதைகள், சுவைப்பதற்கோ செய்திச் சுண்டல், சிரிப்பதற்குச் சில கணங்கள் . சுவையான கேள்வி பதில் என வந்துதிக்கும் சிரித்திரன் சரித்திரத்தில் வீறுநடை போட என்றென்றும் என் வாழ்த்துக்கள்!

**செல்வி கல்பனா**
**மானிப்பாய்.**

■ **ஆசிரியர் சிரித்திரன்!**
நீங்கள் சிறப்புடன் சித்தியடைந்த மாணவரை சிரித்திரனில் அறிமுகம் செய்யாதீர்கள். மாணவர்களுக்கு ஊக்கம் கொடுக்கக்கூடியதாகிய அம்சம். எங்கள் 'ரியூட்டரியில்' எல்லோரும் படித்தார்கள்.

**சுபாசினி, ரஜனி, யாழினி.**

■ **ஆசிரியர் சிரித்திரன்,**
**550, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**
சிரித்திரன் சேவை வளரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

**இராசரத்தினம் அகிலன்**
**கந்தர்மடம்.**

■ **அன்பார்ந்த ஐயா!**
சஞ்சிகை ஜனரஞ்சகமாக இருக்கின்றது. வாசிகசாலையில் பிய்த்துப் பிடுங்கிப் படித்ததில் சஞ்சிகை சிதைந்து போய்விட்டது. மற்றும், சிரித்திரன் விலாசத்தை துலாம்பரமாக , துணிவுடன் போடுங்கள்.

**ஜெயகௌரி மனோகரன்**
**மானிப்பாய்.**

போனமாத சிரித்திரன் சஞ்சிகை புதுப்பொலிவுடன் வந்தது. முரண்முறுவல் செய்திச் சுண்டல் எண்ணத்தோகை எல்லாம் எம்மைக் கவர்ந்தன. எமது வாழ்த்துக்கள்.

**சி. குகன்**
**உடுப்பிட்டி.**

குரு(தி)ஷேத்திரம் போர்க்காலத்திற்கு ஏற்ற அம்சம். எவ்வளவோ விஷயத்தை அறியத்தருகிறது.

**செல்வி விமலநாயகி**
**மருதனாமடம்.**

மகுடியாரே! பதில் சொல்லும் சாகசத்தை எங்கு கற்றீரோ? பலே! சபாஷ்! பிரமாதம்! வாழ்க உம் பேனா!

**சிவராசா**
**தும்பளை.**

சென்ற சிரித்திரன் எம்மை வெகுவாகக் கவர்ந்தது. புது எழுத்தாளரை எமக்கு அறிமுகப்படுத்தியதற்கு நன்றி.

**செல்வி யசோதா தம்பிராசா.**

# மேதைகளின் வாழ்வில்

பிரபல இலக்கிய கர்த்தா ஏணஸ்ட் கெமிங்வே தனது வாழ்க்கைப் பயணத்தின் இறுதித் தரிப்பிடமாய் தற்கொலையைத் தேர்வுசெய்தவர்.
1955 ம் ஆண்டு கெமிங்வேக்கு நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. பரிசைப் பெற ஹனாவாவிற்கு வந்தவர், இலக்கிய வட்டாரத்திற்கு பெரும் அதிருப்தியைக் கொடுத்தார். காரணம் தன்னுடன் பிரதம விருந்தினர்களாக அவர் அழைத்து வந்தது, படிப்பறிவற்ற சில கடற்றொழிலாளர்களை.

கெமிங்வேயின் பிரபல நவீனங்களில்( நாவல்கள் ) ஒன்று "கடலும் முதியவரும்" (தி ஓல்ட் மேன் அண்ட் தி ஸீ), அதற்குக் களம் அமைத்துக் கொடுத்ததே ஒரு கடற்றொழிலாளர் கிராமம்தான். அது கியூபாவில் இருக்கின்றது. அங்கு விசுவாசம் மிக்க நண்பர் ஒருவர் இருந்ததார். பெயர் கிரிக்கோரியா. தன் நட்பின் அடையாளமாக, அவரைத் தன் படகிலேயே பணிபுரிய அழைத்துக்கொண்டார் கெமிங்வே.

அவர் அடிக்கடி பெருமையுடன் கூறிக்கொள்வது "கியூபா எனது இரண்டாவது தாய் நாடு" ஒரு அமெரிக்கரான கெமிங்வே அங்கு முப்பது ஆண்டுகள் வாழ்ந்தவர். அதிலும் சிறப்பு எதுவெனில், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராகப் போராடிய கியூப விடுதலைப் படையினருக்கு மறைமுகமாகப் பல உதவிகளைப் புரிந்திருக்கின்றார்.

அவர் வாழ்ந்த இல்லம் இன்றும் அதே நிலையிலேயே அருங்காட்சியகமாக (மியூசியம்) அங்கு பேணப்படுகின்றது.

■ ***என்ன கடிதக்காரனைக் கண்டிட்டு துள்ளிக்கொண்டு ஓடிப்போனாய் கடிதம் வேண்டினவுடன் சோர்ந்து வாறாய்.***

■ ***அது லோக்கல் கடிதம்.***



படிப்பகம்

www.padippakam.com

உருவகம்:

# ஒன்றுமில்லா(துவர்)ததுகள்

நாகதீபம் என்ற நாடு அமைதியை இழந்து ஆண்டுகள் பல ஓடிமறைந்தது. அரண்மனை அமைதிக்குப் பதில் புயலால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது.

குளிரூட்டிய நவீன கலாமாளிகையான அந்த அரண்மனையின் சித்திர கூட தூளிகா மஞ்சத்தில் மன்னன் பிறேமாதித்தன் அர்த்த வேணுகோபாலன் பாணியில் படுத்திருந்தான். மனம் அமைதியை இழந்துகொள்ள, சிந்தனை ஒரு நிலைப்படாத மன்னன், குழம்பிக் குழம்பித் தவித்துக்கொண்டிருந்தான்.

அமைச்சர்கள், ஆலோசகர்கள், அறநூல் வல்லாளர்கள் மதபீடத்தின் பீடாதிபதிகள் என்ற பலர் சூழ்ந்திருந்த போதிலும் மன்னன் ஏதோ குழம்பிக்கொண்டிருந்தான்.

நாட்டின் பல பகுதிகளில் உக்கிரமடைந்திருந்த போரின் தாக்கம்போலும்.

"மந்திரி தனது மாநகர் தன்னில் மாதமும் மாரி மழை பொழிகின்றதா?" என்று கேட்கும் நாடக மேடை மன்னன்போல நாகதீப மன்னனும் இருந்திருப்பதால்தான் இத்தனை கூட்டமோ?

பல இனங்கள் மொழிவாரியாக வாழும் சின்னஞ் சிறியநாடு அது. ஆனாலும் மிகப் பெரியதும் பழையதுமான வரலாற்றைக் கொண்டது. இரண்டு பெரும் அரசுகள் மொழிவாரி அரசுகளாக இருந்ததற்கான நீண்ட வரலாறு இருப்பதை பல உலக நாடுகளும் அறிந்துதானிருந்தன.

"ஒரு மொழி ஒரு மதம்" என்ற கோசத்தோடு ஆட்சியினை என்று அந்த நாடு ஏற்றதோ அன்றிலிருந்துதான் போர் என்ற கலையை நாடு கண்டு கலங்கத் தொடங்கியது.

பிறேமாதித்தனுக்கு முன் ஆண்ட ஜெயரூபன் காலத்தில்தான் போர் மிக உச்ச நிலையை அடைந்தது. போருக்கு வரைவிலக்கணம் சொன்ன ஜெயரூபனால் அந்தப் போரை அடக்க முடியாத போது வல்லாதிக்க நாடொன்றின் துணையோடு அந்தப் போரை ஒழித்து விட ஒப்பந்தம் செய்து தோல்விகண்டதோடு, மகுடாபிசேகத்தை பிறேமாதித்தனுக்களித்துதான் ஒதுங்கிக் கொண்டது.

பிறேமாதித்தன் மகுடஞ் சூடியபோது சிறுபான்மை இனத்தின் போராட்டத்தை முடித்து விடுவதாகவும் அவர்களது உரிமையை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்திருந்தான்.

மகுடஞ் சூடியபின் அவனும் அதை மறந்துபோனான்.

மறவர் படையின் போர் பல சாதனைகளைப் படைத்து வீரத்தின் விளைநிலமாகத் தமது தாயகத்தை உலகம் உணரவைத்தது.

அரச படைகள் சிதறி ஓடின. பலகோடி பணச்செலவிலும், பல்லாயிரம் சிப்பாய்களை இழந்த நிலையிலும் மன்னன் பிறேமாதித்தன் சிறுபான்மையினரின் போரை நிறுத்த உகந்த திட்டமொன்றைத் தயாரிக்குமாறு அமைச்சர் ஒருவரை நியமித்தான்.

(வளவைவளவன்)

முன்னைய காலங்களில் ஏமாற்றிவந்த ஏமாற்றுக்கள் இந்த மறவர் படையிடம் பலிக்காதுபோனதை உணர்ந்ததால் வந்த மாற்றமோ?

(21ம் பக்கம் பார்க்க)



"மகன் இரண்டு 'A' இரண்டு 'B' எடுத்திருக்கிறான்; பிறகென்ன கவலை?

"அவன் உடலில் விட்டமின் A, B சத்தில்லை! படிப்பிலைதான் என்னவோ...

படிப்பகம்

www.padippakam.com


# சக்தி

**வீடியோ என்ரர்பிரைஸ்**

* தொம்சன் ஒரிஜினல் வீடியோ, ஓடியா
* பழைய - புதிய திரைப்பட பாடல்கள் வீடியோ, ஓடியோ கசற்றி / பெறவும்
* சிங்கப்பூர், இந்தியா றெடிமேட் ஆடைகள், கைக்கடிகார ங்கள்
* சுவர்மணிக்கூடுகள், பட்டு வேஷ்டிகள்,
* யானைமார்க் குளிர்பானங்கள், சிறந்த ரக மிளகாய்த்தூ /, அரிசிமா
* ராஜா, ரமி, தொம்சன் கொம்பக் டிஸ்க்குகள் மர் றும்
* சிங்கப்பூர் நகைகளையும் வாங்குவதற்கு சிறந்த ஒரே ் தாபனம்

**SAKTHI**

**VIDEO ENTREPRISE**

Tel: 42 52 53 01 / 42 54 09 56. Fax: 30 73 47 73




# ஏசியா என்ரபிரைஸ்

**ASIA ENTERPRISE**

ஈழத்துச் சிரித்திரன் மேலைர ாடுகளில்
உலாவருவது குறித் ு
எங்களது மகிழ்ச்சின பத்
தெரிவித்துக் கொள்ளுகி ன்றோம்.

230, Rue de Fg. St. Denis,
75010 Paris.

Tel: 40 34 87 46
Metro: La Chappelle
ou Gare du Nord

*தமிழீ ்த்தில்,*
*யுத்த மேகங்களுக்கு கீழ்நின்று,*
*ப ப சிக்கல்கள், சிரமங்களுக்கு மத்தியில்*
*வெளியிடப்படும் "சிரித்திரன்" சஞ்சிகை,*
*ச ர்வதேசமும் பரந்து வாழும் எமது மக்கள்*
*பட ்த்துப் பயனுற வேண்டும் என்ற நோக்குடன்*
*மீள் பதிப்புச் செய்யப்படுகின்றது.*

www.padippakam.com

(19ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் மனமகிழ்ந்து பல மாத முயற்சியில் ஒரு திட்டத்தை முன்வைத்தார்.

திட்டம் மன்னனின் அமைச்சர்கள், மதபீடாதிபதி கள் என்ற தரப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அந்தத் திட்டத்தை எவரும் படித்ததாக இல்லை.

"திட்டத்தை தீயிடவேண்டும்; இதைத் தயாரித்த அமைச்சரை சிறையிடவேண்டும்" இது மன்னனின் எடுபிடிகளான அந்தக் கூட்டத்தின் குரலாகி நாடு பூராவும் களேபரமடைந்திருந்தது.

தாளமுக்கம் கண்ட வங்காளக் கடலாக நாகதீபம் மாறிக்கிடந்தது.

குள்ள நரிகள் போலச் சில அமைச்சர்கள் போருக் குத் தூபமிட்டனர். மன்னனை வீழ்த்தவும் சதி செய்யத் தொடங்கினர்.

பாவம் பிறேமாதித்தன்... குழம்பிப்போனான். ஒரு சித்தப் பிரமை பிடித்த மனநோயாளிபோல் குழம்பிச் சோம்பிக்கிடந்தான்.

சிறுபான்மை இனப் போராட்டம் நாளுக்கு நாள் வெற்றிவாகை சூடி வளர்ந்து கொண்டிருந்திருந்தது.

பல நாட்டு அரசுகளின் பரிகசிப்பும் எச்சரிக்கை யும்... மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள், உயிரிழப்பு, பொருளாதார நெருக்கடி... எல்லாம் திரண்டு மன்னனைத் தாக்கின. மன்னன் செய்வத றியாது தடுமாறி நின்றான். மன்னன் முன் திட்டம் தயாரித்த அமைச்சர் தோன்றினார்.

மன்னா! என்ன மனக்குழப்பமோ! மன்னன் மௌனத்தைக் கலைக்கவில்லை.

வேதனை மிக்க வேந்தே! விளம்புவேன்கேளும்,

"மொட்டச்சியை கூந்தலழகி" என்பது போலவும், "சித்தங்கலங்கியவனை வித்தகன்" என்பதுபோலவும் உமது மதபீடாதிபதிகள் எனது திட்டத்தை விமர்ச் சிக்கிறார்கள். யாரும் படிக்கவில்லை என்? ஏனென் றால் அவங்கள் எல்லாம் ஒன்றுமில்லாதவர்கள். அறம் பேண வேண்டிய மதவாதிகள் அறத்தைவிட்டு மறத்தை விரும்புவது வேறு எதைக் குறிக்கும். நூறுவீத உரிமைக்கு போராடுபவர்களுக்கு அறுபது வீதத்தைக் கொடுத்தாவது போரை முடிக்க நான் முயன்றேன். ஆனால் மத பீடாதிபதிகள் வரலாற்றை உணர்ந்து புலத்தியன் நகர்வரை கொடுக்க விரும்பு வதாகப்படுகிறது. அவர்கள் எடுப்பதற்குத்தான் சாதகமாகும், யோசித்து முடிவை நீங்களாவது எடுங் கள். தனது கடமை முடிந்ததென்றோ என்னவோ அமைச்சர் சென்று விட்டார்.

பிறேமாதித்த மன்னன் தீவிரமாக யோசித்து முடி வில் தனது பரிவாரங்களையெல்லாம் அழைத்தான்.

மதபீடாதிபதியை வணங்கிவிட்டு, மதபீடாதிபதி முதல் எல்லோரையும் தனித்தனியே கேட்டான். "அமைச்சரின் திட்டத்தைப் படித்தீர்களா?" என்று.

எல்லோரிடம் இருந்தும் "இல்லை" "இல்லை" என்ற பதிலைத் தவிர வேறு எதுவுமே வரவில்லை.

எல்லோரையும் அனுப்பிவிட்டு மன்னன் சொன் னான் "அமைச்சர் சொன்னது உண்மைதான்" "இ வர்கள் ஒன்றுமில்லாதவர்கள்... இவர்கள் ஒன்று மில்லாதவர்கள் அல்ல. ஒன்றுமில்லாததுகள்" என்று.

மன்னன் பிறேமாதித்தனின் மனதில் ஒன்றுமில்லா ததுகளின் தாக்கம் என்ன செய்யப்போகின்றது என் பது மட்டும் புரியமுடியாத.... ஒன்றுமில்லாததாகப் போகுமோ....? ■

LUNE INTERNATIONAL HOME VIDEOS

World wide film Distributors (Screen films and videos)

For all contacts

Write to : 10, Rue Henri - Poincaré,
75020 PARIS,
FRANCE.



படிப்பகம்

www.padippakam.com

# குரு(தி)ஷேத்திரம்

### 1986 ம் ஆண்டில் ஒரு நாள்.

"என்ன இவங்களைக் காணேல்ல!" சலித்துக்கொண்டான் அவன். கொஞ்சநேரத்துக்கு முன்னர் கடலலையில் (படகில்) தள்ளாடிக்கொண்டிருந்த அவன், இப்போது தரையில் மன அலையில் தள்ளாடிக்கொண்டிருந்தான். "பொறன், வருவாங்கள் தானே. ஏன் அந்தரப்படுகின்றாய்? எப்பிடியும் செய்தி கிடைச்சிருக்கும்." -அவனது நண்பன் பதிலளித்தான். தூரத்தில் சில உருவங்கள் தெரிந்தன. உற்றுப் பார்த்தார்கள். அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் போராளிகள் தான்.

நடந்து வந்துகொண்டிருந்த போராளிகள் உற்றுக் கவனித்தார்கள். இரண்டு இளைஞர்கள் -இரண்டு ஏ. கே ரக ரைபிள்கள், இரண்டும் வரம்பில் கிடந்தன. போராளிகள் அருகே வந்தார்கள். "அண்ணை ஆரண்ணை நீங்கள்?" இருவரையும் பார்த்துக் கேட்டனர். "வாங்கோ தம்பி. உங்களைத் தான் பார்த்துக்கொண்டிருக்கிறம். இந்தாங்கோ." என்று கூறி, ரைபிள்களை ஒப்படைத்தான் ஒருவன். மற்றவன் மேலதிக ரைவைக்கூடுகள், கோல்சர் என்பவற்றை எடுத்துக் கொடுத்தான். போராளிகள் வியப்பில் ஆழ்ந்தனர்.

■ ■ ■

'இந்தியா ஈழத்தமிழ் மக்களுக்கு பாதுகாப்பான நிலம்' -கானல் நீர்போல அந்தக் காலத்தில் இப்படித் தெரிந்தது. எனவே, பாதுகாப்புக்காக செல்பவர்கள், வேறுநாடுகளுக்குச் செல்வதற்காகச் செல்பவர்கள் கொழும்பு மண்ணை மிதிக்காமல், தமிழக மண்ணை மிதிப்பதையே விரும்பினார்கள்.

இராணுவ நடமாட்டம் உள்ள ஊர்களில் உள்ளவர்கள்தான் இவ்வாறு நாட்டைவிட்டு வெளியேறினார்கள். பெரும்பாலும் மன்னாரில் இருந்தே இவர்கள் தமிழகத்திற்குப் பயணமானார்கள். கடலில் சிறீலங்காப் படையினர் எதிர்ப்படும் வாய்ப்பு குறைவாக இருப்பதனாலேயே இவ்வாறு மன்னார்ப் பாதையைத் தேர்ந்தெடுத்தனர். இப் பாதை வழியேதான் அன்று அந்தப் படகும் சென்றுகொண்டிருந்தது.

கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது -- படகில் இருந்தவங்களது மனங்களைப் போலவே. "எப்போது போய்விடுவோம்?" இதுதான் அவர்கள் மனதில் உள்ள கேள்வி. "கடவுளே! சிறீலங்காப் படை எதிர்ப்படாமல் காப்பாத்திப்போடு!" இதுவே அவர்கள் அனைவரும் தத்தமது கடவுள்களிடம் விடுத்த ஏகோபித்த வேண்டுகோள். இவ்வாறு பயணமாகிக் கொண்டிருந்தவர்களுள்தான் அந்த இரு இளைஞர்களும் அடங்கியிருந்தனர்.

**கரும்பறவை**

புதிதாக கடலில் பயணமாவோர் வாந்தி எடுத்துக் கொண்டனர். சிலர் கடலைப் பார்த்த பயத்தில் தலை சுற்றி படகினுள் படுத்துக்கிடந்தனர். படகு போய்க்கொண்டேயிருந்தது.

"அண்ணை, கறுப்புத் தெரியுது" - அணியத்தில் இருந்தவன் அலறினான் எல்லோரும் திடுக்கிட்டனர். "வடிவாப் பார்!" -பிரதான படகோட்டியின் குரல் அது.

"ஓம் அண்ணை...... எங்களை நோக்கித் தான் வருகுது... ஓ... அவங்கள் தான்." -சனங்கள் கலவரப்படத் தொடங்கினார்கள். "அப்பிடியே இருந்தமாதிரி இருங்கோ, படகு கவிண்டிடும்." -படகுக்காரனின் எச்சரிக்கைப்படி நடந்துவிடுமோ என்று பயந்த அனைவரும் அப்படியே இருந்தனர்.



படிப்பகம்

www.padippakam.com

சிறீலங்காப் படையின் படகு நெருங்கிவிட்டது. வெள்ளைத் துணியைக் கண்டதும் இது 'அகதிகளாகச் சென்றுகொண்டிருப்பவர்களின் படகுதான்' என்பது அவர்களுக்கு ஊர்ஜிதமாயிற்று. அவர்களின் உத்தரவுப்படி இப்படகு அவர்கள் அருகே சென்றதும், மக்கள் கையை உயர்த்திக்கொண்டு நின்றனர்.

இரு படையினர் அகதிகளின் படகினுள் இறங்கினர். ஒவ்வொருவரது பொதியினுள்ளும் வீட்டில் இருந்த துவாய் தொடக்கம் எல்லாச் சமான்களும் இருந்ததைக் கண்டனர். நாய்கூட பயந்தோடுபவர்களைத் தானே துரத்துவது வழக்கம். பயப்படுபவரிடம்தானே தனது வீரத்தைப் பறைசாற்ற முடியும், இவர்களும் அந்த நிலையில்தான் இருந்தனர். படகையும், படகில்வந்த மக்களையும் முகாமுக்கு கொண்டுவரும்படி உத்தரவிட்டான் சிறீலங்காப் படைகளுக்கு பொறுப்பாகவந்த அதிகாரி. இரு சிப்பாய்களையும் இவர்களுடனேயே வரும்படி உத்தரவிட்டான்.

சிறீலங்காப் படையினரின் படகுக்குப் பின்னால் அகதிகளின் படகு சென்றுகொண்டிருந்தது. அகதிகளின் படகின் வேகம் படையினருக்கு சலிப்பைக் கொடுத்தது. எனவே, அவர்கள் விரைந்து செல்லத் தீர்மானித்தனர். எப்படியும் இப்படகைக் கொண்டு வந்து சேர்க்குமாறு தமது சிப்பாய்களுக்கு உத்தரவிட்டுச் சென்றுவிட்டனர்.

எதிர்பார்த்தளவு பிரச்சனை ( சுட்டுக்கொல்லுதல் ) வராவிட்டாலும், இனிமேல் என்ன நடக்குமோ? என ஒவ்வொருவரும் பயந்தபடியே இருந்தனர். அவர்களது பயம் -வெளிறிய முகம் -சிப்பாய்களுக்கு சிரிப்பை வரவழைத்தது. இவர்களோடு செல்லும் பயணம் உல்லாசமாக அமைய மாட்டாது எனக் கருதினர். எனவே அந்த உல்லாசத்தைத் தாமே வரவழைக்கத் தீர்மானித்தனர். யாரையாவது பாடச் சொல்லுமாறு வேண்டினர். வேள்விக்குப் போகும் கடாக்களுக்கு பாட்டா வரும்? தயங்கினர்.

அவர்களது தயக்கத்தைப் பார்க்க இவர்களுக்குச் சிரிப்பு வந்தது. அந்த இரு நண்பர்களில் ஒருவனைப் பார்த்து பாடச்சொன்னார்கள்.

அவர்களின் முடிவு மனக்கண்ணில் தெரிகின்றது. நிலைமை மாறவேண்டுமானால் தாங்கள்தான் செயற்பட வேண்டும். ஆம். பாடத்தீர்மானித்தான் அவன்.

முதலாவது பாட்டு - பாடிக்கொண்டிருந்தான். தாளம்போட்டு ரசித்துக்கொண்டிருந்தார்கள் படையினர். இனிப்பொறுக்க முடியாது. இன்னும் கொஞ்சம் சென்றால் படகு சிறீலங்காப் படை முகாமைச் சென்றடைந்துவிடும். இவன் பாட்டை மாற்றினான். "நீ முன்னாலே போனா நான் பின்னாலே வாறேன்" என்ற மெட்டில் பாட்டு இருந்தது -"நான் இவரைக் கவனிக்கிறன்; நீ இவனைக் கவனி.... கவனம்... கவனம்.... கவனம்.... கவனம்.... கவனம்..."
நண்பன் விசயத்தைப் புரிந்துகொண்டான், அதற்கேற்ப தன்னைத் தயார் நிலைக்கு கொண்டுவந்தான். ஏனையோர் மனதில் பீதி படர்ந்தது -படையினர் மக்கள் முகத்தைக் கவனிக்கவில்லை. பாட்டை இரசிப்பதிலேயே இருந்தனர்.

ஒரே நேரத்தில் நண்பர்கள் இருவரும் பாய்ந்தனர். கடலின் இரைச்சலுடன் சிறீலங்காப் படையினரின் ஆயுளை முடித்த வேட்டோசைகளும் கலந்தன. படகு புறப்பட்ட இடத்தை மீண்டும் சென்றடைந்தது. "துணிந்தவன் வாழ்வான்" என்பது மீண்டும் நிரூபணமாயிற்று.

■ ■ ■

## தில்லுமுல்லுத் தந்தானா

■ "சந்திராவின் பேச்சு கட்சியின் யாப்பிற்கு எதிரானது"

- அநுரா

■ "அநுராவை விட எனக்குச் சட்டங்கள் கூடத் தெரியும்!"

- சிறீமாவோ

■ "இராணுவ நடவடிக்கையின் போது 60 இந்துக் கோயில்களில் விக்கிரகங்கள் அகற்றப்பட்டன."

- செய்தி

■ "ஜீப்பில் ராணுவப் பாதுகாப்புடன் பூசைக்குச் செல்லும் ஐயர்."

- செய்தி



படிப்பகம்

www.padippakam.com

# கதைத்தேன்

## சகோதரப் பிரமை

அவனிற்கு ஒரு தங்கை. அவனிற்கான பணிவிடைகளை எல்லாம் அவளே செய்தாள். ஒருபோது கடும் நோய் அவனைக் காவு கொண்டுவிட்டது. அவன் அதிர்ந்துபோய்க்கிடந்தான். அப்படியே மனநோயாளியாகிப் போனான். உடனடியாக ஒரு மனோவைத்திய நிபுணரிடம் அனுமதிக்கப்பட்டான், பலவிதமான சிகிச்சைகள் அளிக்கப்பட்டன. எத்தனையோ விலையுயர்ந்த மாத்திரைகள். ஒன்றுக்குமே பலனில்லை.

ஒரு நாள், மருத்துவமனை மேல் மாடியிலிருந்து சாளரத்தினூடே தெருவை வெறிக்கப் பார்த்தபடி நின்றான். அங்கு சடுதியாய் ஒரு விபத்து நிகழ்ந்தது. அதில் சிக்குண்டுள்ள பெண் சிதைந்து போனாள். கண்டவன் மயக்கமுற்று வீழ்ந்தான்.

அவன் மயக்கம் தெளிந்து கண்களைத் திறந்த போது, மனோநிலை சற்று வழமைக்குத் திரும்பியதாய் இருந்தது. எனினும், வாய் புலம்பினான். ஒன்றையே திரும்பச் சொன்னான். "ஐயோ என் அருமையான தங்கை தேனீர் தரத் தாமதித்தால்கூட நொண்டியன்றல்லவா ஏசி வந்தேன்."

தேனுகா-

அடுத்த இதழில் இளையவனின் சிறுகதை இடம்பெறும்

# பழகைச்சிறப்பு

அழகை மனிதன் ஆழமாக விரும்புகிறான் என்பதற்குப் பல சான்றுகள் உள. அவன் பாவனைப் பொருட்கள் எல்லாவற்றிலும் அழகொழிக்க வைத்தான். ம்

அவன் பாவிக்கும் பாக்குவெட்டி, சீப்பு, நீர் அருந்தும் குவளைகள் போன்ற எல்லாவற்றிலும் அழகு கொட்ட வைத்தான், இன்று, அவைகளைக் காண முடியவில்லை. ஆனால், அவைகளைத் தொல் பொருட்காட்சியில் பார்த்து மகிழலாம்.

# "V" யும் சேர்ச்சிலும்

ஹிட்லர் இங்கிலாந்தின்மீது போர் தொடுத்தபோது நெவில் ஸேம்பர் லேன் பிரதமராக இருந்தார். அவரை யுத்தகாலத் தலைவராக மக்கள் காணவில்லை. ஸேம்பர் லேன் ராஜினாமாச் செய்தார். வின்ஸ்டன் சேர்ச்சிலை தேர்ந்தெடுத்துக்கொண்டார்கள். சேர்ச்சில் பதவியேற்றுக்கொண்டார். 'V' வடிவ சைகை காட்டி, யுத்த பீதியில் இருந்த மக்கள் மனதில் உரம் கொடுத்தார். மக்களும் பீதியை விட்டு துணிவு கொண்டார்கள். அத்துடன் நில்லாது அவரின் சொற்பொழிவுகள் இங்கிலாந்து மக்களிற்குத் தென்பூட்டியது. சேர்ச்சிலை ஒரு மகா யுத்த வீரனாக மதித்தார்கள். வெற்றியின்பின் சேர்ச்சில், "இங்கிலாந்து தேச மக்களிற்கு சிங்கத்தின் இதயம் இருந்தது; அதற்கு கர்ச்சனையைச் சேர்க்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது." என நினைவு கூர்ந்தார்.

ஆசிரியர்:- என்ன ஆச்சி கொஞ்சக் காலமாக உங்களை ஊரில் காணேல்ல.

ஆச்சி:- தம்பி உனக்கு ஒன்டாரியோ, ரொறன்ரோ தெரியுமே? அங்கதான் நான் பிள்ளைகளிட்ட இருந்திட்டு வந்தனான்.

ஆசிரியர்:- நான் உதுகளை பூமிசாஸ்திரப் புத்தகத்தில்தான் பார்த்திருக்கிறன்.

ஒருவர்:- என்ன தரகர் சிரிப்பு ரெண்டு காதையும் தொடுகுது.

தரகர்:- ஒரு மாப்பிள்ளை கட்டுக்காசுக்கு ஒழுங்கு பண்ணியிருக்கிறன்.

ஒருவர்:- கட்டுகாசுக்கோ?

தரகர்:- ஓர் நாலுலட்சம்சீதனம் ரெண்டு வருஷத்தில கட்டிப் போடவேணும்.



படிப்பகம்

www.padippakam.com


MALA'S

# மாலா மளிகை

# MALA S.A.R.L.

ஒரே இடத்தில் தேவையான எல்லாவற்றையும் பெற
நாடுங்கள் நவீன மயப்படுத்தப்பட்ட

## மாலா மளிகை

பிரதி வெள்ளிதோறும் நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட
மரக்கறிகள், பழவகைகள், யானைமார்க் குளிர்பானங்கள்
Lion Lager, Lion Stout, Mendis Arrack அத்துடன் பியர்
எல்லாமே நவீனமயப்படுத்தப்பட்ட மாலாவில் கிடைக்கின்றன.

22, Rue Labat, 75018 Paris
Mo: Marcadet Poissonniers

TEL: 42 62 01 23



EURO TRANSPORT

EURO TRANSPORT

தளபாடங்கள், மற்றும் பொருட்களை
பாதுகாப்பான முறையில் ஏற்றி, இறக்க
தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்தாபனம்

**EURO TRANSPORT**

தொடர்புகட்கு:
அலோசியஸ்: 43 83 20 94
சுபன்: 46 58 78 59

www.padippakam.com


# AKILAN

VIDEOS SALOON

அன்றைய, இன்றைய, நாளைய
ஒறிஜினல் வீடியோ படங்கள்
அழைக்கின்றது

## அகிலன் வீடியோஸ்

அன்றும் இன்றும் உங்களை
ஆவலுடன் கேட்கத் தூண்டும் உங்கள்
அபிமானப் பாடகர்களின் பாடல்கள்
அடங்கிய ஓடியோ, வீடியோ, C. D.

அகிலன் வீடியோஸ் புதிய அறிமுகம்
"திரை மெட்டுக்கள்" பிரதிகள் பெற்று
பார்த்து கேட்டு மகிழுங்கள்.

அனைத்து வார, மாத சஞ்சிகைகள்
பத்திரிகைகளும் கிடைக்கின்றன.

## அகிலன் சலூன்

அழகை அள்ளி வழங்கும்
அதிநவீன சிகை அலங்காரம்
ஆடவர்களின் அலங்கார நிலையம்
அதுவே நிலையான இடம்

AKILAN VIDEO'S & SALOON

21, BD. DE LA CHAPELLE
75010 PARIS.

203, RUE DU FG. ST DENIS
75010 PARIS.

TEL: 42 05 30 40

Mo: LA CHAPELLE ou GARE DU NORD


படிப்பகம்